

மகத்தான ஒக்டோபர் புரட்சியின் 50-வது ஆண்டு விழாவையொட்டி ஹட்டனில் இம்மாதம் [9-ந் தேதி நடைபெற்ற இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் கூட்டத்தில் திரண்டிருந்த மக்கள் வெள்ளத்தின் ஒரு பகுதி. இக் கூட்டத்தில் தோழர் சண், எஸ். டி. பண்டாரநாயக்கா எம். பி- ஆகியோர் பேச்சாளர்களாகக் கலந்துகொண்டனர்.


# தொழிலாளி

இலங்கை தொழிலாளர் வர்க்கத்தின் வார இதழ்

மலர் 6 | இதழ் 5 | டிசம்பர் 1 1967 | பக்கங்கள்12 | விலைசதம்15


## இந்த இதழ்

நவம்பர் 29-ந் தேதி அல்பேனிய தேசிய தினம். அதனையொட்டி இந்த இதழ் அல்பேனியா பற்றிய விசேஷ இதழாக வெளி வருகிறது.

ஒரு பொருளாதாரச் சூருவளி இலங்கையைத் தாக்கியுள்ளது. சில வருடங்களாக, பாரதூரமான பொருளாதார நெருக்கடியின் மத்தியில் நாம் வாழ்ந்து கொண்டிக்குகின்ரேம். எமது ரூபா இது காலவரை எந்த பவுன் ஸ்டர்லிங்குடன் பின்னிப் பிணைக்கப்பட்டிருந்ததோ அந்த பவுன் ஸ்டர்லிங் மதிப்பிறக்கம் செய்யப்பட்டதை பாவித்து அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகள் எமதுரூபாவையும் மதிப்பிறக்கம் செய்யப் பண்ணியிருக்கின்றனர். இதனுல் எமது பொருளாதார நெருக்கடி மேலும் உக்கிரமடைந்துள்ளது. பொது மக்களுக்கு மேலும் மோசமான கஷ்டங்களும் இன்னல்களும் வந்து சூழ்கின்றன.

# நாணய மதிப்பிறக்கம்

# பொருளாதார நெருக்கடி

# மோசமடைவதன் அறிகுறி

முதலாளித்துவ உலகின் இரண்டாவதாக உள்ள—மிகுந்த செல்வாக்குடைய நாணயமான பவுன் ஸ்டர்லிங் மதிப்பிறக்கப்பட்டமை, உலக முதலாளித்துவத்தை, குறிப்பாக பிரித்தானிய முதலாளித்துவத்தை சூழ்ந்துள்ள நெருக்கடியின் ஓர் அறிகுறி என்பதை முதலில் நாம் புரிந்துகொள்ள வேண்டும். உலக ஏகாதிபத்தியம் தனது இறுதி யாத்திரையில் சென்று கொண்டிருக்கிறது என்ற மார்க்சிஸ-லெனினிஸ விளக்கத்தை இது ருசுப்படுத்துகிறது.

நாணயம் மதிப்பிறக்கப்பட்டது என்ருல் அதன் பொருள் என்ன? அதாவது, அந்த நாணயத்தின் உத்தியோக பூர்வமான மதிப்புக் குறைக்கப்பட்டது என்பதாகும். வழக்கத்தில், அப்பேர்ப்பட்ட ஒரு நிலை உருவாகுவதற்கு முன்னதாகவே உலகச் சந்தையில் உத்தியோக பூர்வமற்ற முறையில் அந்த நாணயம் மதிப்புக் குறைந்து விடுகிறது. ஆகையால்தான் கள்ளச் சந்தையில் ஒரு நாணயத்திற்குள்ள மதிப்பு, அதன் உண்மையான மதிப்பை எடுத்துக்காட்டுகிறது. (உத்தியோக பூர்வமான மதிப்பு உண்மையானதல்லாமல் இருக்கலாம்)

## பிட்ரிடிஷ் நாணயம் மதிப்பிறக்கப்பட்டதேன்?

பிரிட்டனைச் சூழ்ந்துள்ள பொருளாதார நெருக்கடியின் விளைவாகத்தான் பவுன் ஸ்டர்லிங் மதிப்பிறக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. பிரிட்டனின் ஏற்றுமதியினுல் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு தனக்குத் தேவையானவற்றை இறக்குமதி செய்யாமல் போனதே இந்த நெருக்கடி உருவாகியதற்குக் காரணம். இதனுல் இயற்கையாகவே கொள்வனவில் ஊசலாட்டம் ஏற்பட்டு பவுனின் மதிப்புக் குறைந்துள்ளது. பவுன்ஸ்டர்லிங்கை மதிப்பிறக்கம் செய்ததன் மூலம் அதாவது அதனை மலிவாக்கியதன் மூலம்—அல்லது வேறு வார்த்தையில் கூறுவதாயின் உலகின் ஏனைய பகுதிகளில் பிரிட்டனின் ஏற்றுமதிப் பொருட்களை மலிவாக்கியதன் மூலம் பிரிட்டன் தனது ஏற்றுமதியைக் கூட்டி அதன் மூலம் நெருக்கடியைச் சமாளிக்க எண்ணுகிறது.

இந்த முயற்சியில் அது வெற்றி பெறுமா என்பது வேறு விஷயம். இங்கு நாம் இதைப்பற்றிக் கவலைப்படவில்லை, இலங்கையின் ரூபா மதிப்புக் குறைக்கப்பட்டதற்கான காரணங்களை ஆராய்வதுதான் எமது பிரச்சினை. நாம் ஸ்டர்லிங் பிரதேசம் என்று கூறப்படுகின்ற வட்டத்தில் இருந்த போதிலும், பவுண் ஸ்டர்லிங் மதிப்பிறக்கப்பட்டதும் அதனைத் தொடர்ந்து ரூபாவும் மதிப்பிறக்கப்பட வேண்டியதில்லை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். நாம் ரூபாவை மதிப்பிறக்காமல் இருந்திருக்க முடியும். அவுஸ்திரேலியா, தென்-ஆபிரிக்கா போன்ற ஸ்டர்லிங் பிரதேசத்திலுள்ள நாடுகள் தமது நாணயத்தை மதிப்பிறக்கம்செய்யவில்லை.

1949ம் ஆண்டு பிரிட்டன் தனது பவுன் ஸ்டர்லிங்கை இன்றைய விடக் கூடுதலாக மதிப்பிறக்கியபோது ஸ்டர்லிங் பிரதேசத்தில் இருந்த அநேகமான எல்லா நாடுகளும் தமது வர்த்தகத்தில் பிரிட்டனுடன் தொடர்பு கொண்டிருந்தால் தமது நாணயங்களையும் மதிப்பிறக்கம் செய்தன. யுத்தத்திற்குப் பிந்திய கடந்த பதினெட்டு வருடங்களில் வர்த்தக அமைப்பே மாறிவிட்டது. சாம் மாமா (அமெரிக்கா) பிரிட்டனின்பிரதேசங்களில் மெதுவாகப் பிரவேசித்து வந்துள்ளார். பிரிட்டன் தனது சந்தைகளைப் படிப்படியாக ஸ்டர்லிங் பிரதேசத்திற்கு வெளியே உள்ள நாடுகளிடம் இழந்து வந்துள்ளது. ஆகையால் தான் ஸ்டர்லிங் பிரதேசத்தில் உள்ள சில நாடுகளை பவுன் ஸ்டர்லிங் மதிப்பிறக்கம் பாதிக்கவில்லை.

நிதி அமைச்சர் ரூபா மதிப்பிறக்கத்தைப் பிரகடனம் செய்த தனது வாஞெலிப் பேச்சிலும், என். யூ. ஜயவர்த்தனு போன்ற பொருளாதார நிபுணர்களும் பவுன் ஸ்டர்லிங் மதிப்பிறக்கப்பட்டதைக் கணக்கில் எடுக்காமலே இலங்கை ரூபா மதிப்பிறக்கப் படுவதற்குப் போதிய காரணங்கள் உண்டு என வாதாடியிருக்கின்றனர். சில காலமாக, அமெரிக்க ஆதிக்கமுள்ள சர்வதேச நாணய சபையும் இதனைத் தான் செய்யும்படி எம்மையும் வற்புறுத்தி வந்துள்ளது.

## நாணய மதிப்பிறக்கம் நெருக்கடியின் அறிகுறி

இவர்கள் யாவரும் இலங்கை ரூபாவின் மதிப்பு குறைந்து விட்டது என்பதைத் தான் கூற முனைகின்றனர்.

இது, பாரதூரமான பொருளாதார நெருக்கடி எம்மைச் சூழ்ந்துள்ளது என்பதையும், இதற்கான தீர்வை காண்பதற்கு முடியவில்லை, அல்லது விருப்பமில்லை என்பதையும் இவர்கள் ஒப்புக் கொள்வதாகும்.

11-ம் பக்கம் பார்க்க

# ஸ்ரீ. ல. சுதந்திர கட்சியின் வர்க்க அடிப்படை

எமது அரசியல் நிருபர்

இலங்கையில் 1956-ல், நடைபெற்றது என்னவெனில் முதலாளி வர்க்கத்தின் ஒரு பகுதியிடமிருந்து ஏகாதிபத்திய சார்பான, (கம்புரடா) முதலாளி வர்க்க நலனைப் பிரதிநிதித்துவம் செய்த யு. என். பி. யிடமிருந்து மற்ற பகுதிக்கு — ஏகாதிபத்திய விரோத தேசிய முதலாளி வர்க்கத்தைப் பிரதிநிதித்துவப் படுத்திய சுதந்திரக் கட்சிக்கு-பாராளுமன்ற அதிகாரம் மாற்றப்பட்டமையே என எஸ், டி. பண்டாரநாயக்கா எம். பி. யும், தோழர் என். சண்முகதாசனும் கூறியது, அரசியல் வட்டாரங்களில் — குறிப்பாக சுதந்திரக் கட்சிக்குள்—சுதந்திரக் கட்சியின் வர்க்க அடிப்படையைப் பற்றிய சர்ச்சையைக் கிளப்பி உள்ளது.

இவ்விதமான சர்ச்சை நல்லதே. ஏனெனில் ஒவ்வொரு கட்சியினதும் வர்க்க அடிப்படையை மக்கள் நன்கு தெரிந்துகொண்டிருக்க வேண்டும். இது முக்கியமானது. ஏனெனில், ஒவ்வொரு கட்சியினுடைய சரியான வர்க்க அடிப்படையை தெரிந்து கொள்வதின் மூலம்தான் நாம் அதன் அரசியல் நலனையும், கொள்கையையும் பற்றி சரியான தெளிவுபெற உதவி செய்யும். ஒவ்வொரு கட்சியினுடைய வர்க்கநலன்தான் அதன் கொள்கையை நிர்ணயிக்கும் என்பது அரசியலின் அடித்தளமாகும். ஏனெனில், சமுதாயத்திலுள்ள பொருளாதார வர்க்கங்களைத்தான் அரசியல் கட்சிகள் பிரதிநிதித்துவம் செய்கின்றன.

சமசமாஜ தலைவர்களும், கெனமன் திரிபுவாதக் கும்பலும் தாம் சுதந்திரக் கட்சியிடம் சரணடைந்ததை மூடி மறைப்பதற்காக, சுதந்திரக் கட்சி ஒரு சோஷலிஸக் கட்சி என ஏமாற்றுப் பிரச்சாரம் செய்தனர். இதனால்தான் எஸ். டி. பண்டாரநாயக்காவினதும், என். சண்முகதாசனதும் அறிக்கை அவ்வளவு திடுக்கிடச் செய்தது.

## இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி குறி சொல்லியது

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிதான், 1950-ல் நடைபெற்ற தனது 4-வது கட்சி காங்கிரசில் இலங்கை முதலாளி வர்க்கம் இரண்டாக—முற்போக்கு பிரிவு பிற்போக்கு பிரிவு என-பிளவுபடும் என்று சரியாக குறி சொல்லியது. இவ்வித பிளவுகள் சகல கலோனியல் சார்பு நாடுகளிலும் இடம்பெறுகிறது. ஏனெனில், ஏகாதிபத்தியம், தான் ஆளுகின்ற—ஆதிக்கம் செலுத்துகின்ற நாடுகளில் தேசிய முதலாளித்துவ வளர்ச்சியை எதிர்க்கிறது; தடை செய்கிறது. ஆதலால் முதலாளித்துவத்தின் ஒரு பகுதி ஏகாதிபத்தியத்தின் இந்தக் கொள்கைக்கு எதிராக எப்பொழுதும் எதிர்த்துக் கிளர்ச்சி செய்கிறது. அத்துடன் நாட்டை தேசிய முதலாளித்துவ வளர்ச்சிப் பாதையில் எடுத்துச் செல்ல முயல்கிறது.

இதை அவர்கள் செய்வது அவர்கள் சோஷலிஸ்டுகள் என்பதனாலல்ல. பதிலாக அவர்கள் முதலாளிகள். முதலாளி வர்க்கத்தின் ஒரு பகுதியினர்—என்பதினாலாகும். அவர்கள் சோஷலிஸ்டுகளாக நடிக்க முயல்வதும், சோஷலிஸத்திற்காக உதட்டளவில் சேவை செய்வதாக காட்ட முயல்வதும் உண்மைதான். அதற்குக் காரணம் என்னவெனில், ஏகாதிபத்தியத்திற்கு எதிராக, கம்புரடா முதலாளி வர்க்கத்திற்கு—இலங்கையில் இவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் யு. என். பி. க்கு எதிராக அவர்கள் நடத்தும் போராட்டத்திற்கு பொதுமக்களின் ஆதரவு தேவை என்பதினாலாகும்.

இவற்றையெல்லாம் மிகத் தெளிவாக இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி அதன் 4-வது காங்கிரசில் சுட்டிக்காட்டியது. இது ஓர் குறிப்பிடக்கூடிய தீர்க்கதரிசனம்; ஏனெனில், அப்பொழுது எஸ். டபிள்யூ. ஆ. டி. பண்டாரநாயக்க யு. என். பி.யில் தான் இருந்தார். இத் தீர்க்கதரிசனம் 1951-ல் பண்டாரநாயக்கா யு. என். பி. யிலிருந்து விலகி சுதந்திரக் கட்சியை அமைத்தபொழுது உண்மையாயிற்று.

## சமசமாஜக் கட்சியின் தவறான கணிப்பு

பண்டாரநாயக்கா கட்சி மாறியதைப் பொறுத்து சமசமாஜக் கட்சி கொண்ட கருத்து சரியான ஒருமுனைப் போக்காகும். அவருக்கும் டி. எஸ். சேனநாயக்காவுக்குமிடையில் அது எவ்வித வேறுபாட்டையும் காணவில்லை. ''போக்கிரிகளில் நீயும் ஒருவன். அவர்களிடமே திரும்பிப் போ''—இதுதான் அவர்களுடைய பேச்சுக்களின் கருவாக இருந்தது. அப்பொழுது சமசமாஜக் கட்சியிலிருந்த டபிள்யூ தகாநாயக்காவினால் இது நன்கு முன்வைக்கப்பட்டது.

ஆனால், கம்யூனிஸ்ட் கட்சி வேறு கொள்கையை அனுஷ்டித்தது. பண்டாரநாயக்காவை தேசிய முதலாளி வர்க்கத்தின் பிரதிநிதியாக, அதற்கும் ஏகாதிபத்தியத்திற்கும் கம்புரடா முதலாளி வர்க்கத்திற்குமிடையிலுள்ள முரண்பாடு யு. என். பி. பிளவை ஏற்படுத்தியது எனவும் கூறியது. யு. என். பி. யை விட்டு அவர் வெளியேறியதை கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்றது. அத்துடன் தொழிலாளி வர்க்கத்தின் தலைமையின் கீழ் ஏகாதிபத்திய விரோத, சுதந்திரக் கட்சியையும் உள்ளடக்கிய ஐக்கிய முன்னணியை அமைக்க அறைகூவல் விடுத்தது.

இது சரியானதோர் அரசியல் கணிப்பீடாகும். ஆனால் பண்டாரநாயக்கா ஒரு சோஷலிஸ்டாக என்றுமே இருக்கவில்லை. கம்யூனிஸ்ட் கட்சி என்றுமே அவ்விதம் கருதியது கிடையாது என்பதை தெளிவாக தெரிந்து கொள்ளவேண்டும். பண்டாரநாயக்காவின் அரசியல் பூர்வீகம் யு. என். பி. யில் தான் இருந்தது என்பதையும், அவர் ஓர் நிலப்பிரபுத்துவ—முதலாளித்துவ வர்க்கத்தில் பிறந்தவர் என்பதையும் தெரிந்த எவருக்கும் அவர் இறுதிவரையும் முதலாளித்துவவாதியாகவே இருந்தார் என்பதில் எவ்வித சந்தேகமும் இருக்க முடியாது.

# அரசியல் ஏமாற்றுக்கு பலியாகிவிடக் கூடாது

## தவறான எண்ணங்கள்

டாக்டர் என். எம். பெரேரா, டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா, லெஸ்லி குணவர்தன, டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்க போன்ற உழைக்கும் மக்களைச் சுரண்டி வாழ்கின்ற வர்களை இடதுசாரி கட்சிகள் என அழைக்கப்படுபவற்றின் தலைவர்களாக கணிக்கும் ஒரு சில நாடுகளில் இலங்கையும் ஒன்று என்பதிலிருந்து பண்டாராயக்காவை ஒரு சோஷலிஸ்டாகவும், சுதந்திரக் கட்சியை ஓர் சோஷலிஸ கட்சியாகவும் கருதும் குழப்ப நிலைக்குரிய காரணத்தைப் புரிந்து கொள்ள முடியும்.

ஆகவே ராஜ நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவ குடும்பங்களில் பிறந்தவர்களும் தமது பெற்றோர்களால் விட்டு செல்லப்பட்டு தாம் இன்று வைத்துச் சுரண்டி சுகபோகம் அனுபவித்துக்கொண்டிருப்பவர்களும் சோஷலிஸ்டுகளாகலாம், இடதுசாரி கட்சிகளுக்கு தலைமை தாங்கலாம் என மக்கள் நம்புகின்றனர்.

இவ்வித தவறான எண்ணங்கள் அம்பலப்படுத்தப்படுவதற்கு காலம் வந்துவிட்டது. சமசமாஜக் கட்சி அடித்த குத்துக் கரணத்தை நியாயப்படுத்தவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதின் காரணமாகவே பண்டாரநாயக்காவை ஒரு சோஷலிஸ்டாக காட்ட, சுதந்திரக் கட்சியை ஒரு சோஷலிஸ்ட் கட்சியாக மாற்றவேண்டிய அவசியம் ஏற்பட்டது. 1960-ம் ஆண்டுவரை சுதந்திரக் கட்சியை ஒரு மாற்று முதலாளித்துவக் கட்சியாக சமசமாஜக் கட்சி வர்ணித்ததுடன், யு. என். பி. க்கும் சுதந்திரக் கட்சிக்குமிடையில் அதனால் எவ்வித வேறுபாட்டையும் காணமுடியவில்லை. எல்லோருக்கும் தெரிந்த, திருமதி பண்டாரநாயக்காவே ஒத்துக் கொண்ட மாதிரி பண்டாரநாயக்கா உயிரோடு இருந்த காலத்தில் அவரை சமசமாஜக் கட்சி முற்றுமுழுதாக எதிர்த்தது.

## அரசியல் ஏமாற்று

பண்டாரநாயக்கா கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, 1960 மார்ச் தேர்தலில் என். எம். பெரேராவை தாம் தனியாகவே பிரதமராக்க முற்பட்டு மூக்குடைப்பட்டதைத் தொடர்ந்து சமசமாஜக் கட்சி ஒரு குத்துக்கரணம் அடித்து 1960 ஜூலை தேர்தலில் சுதந்திரக் கட்சியுடன் ஓர் போட்டி தவிர்ப்பு ஒப்பந்தத்தை வேண்டியது. இந்த குத்துக்கரணத்தை நியாயப்படுத்த அவர்கள் சுதந்திரக் கட்சியை ஒரு முதலாளித்துவக் கட்சியிலிருந்து சோஷலிஸ்ட் கட்சியாக மாற்றினர். திருமதி பண்டாரநாயக்காவும் ஒரு நிலப்பிரபுத்துவ பழைய ராஜபிரபுத்துவ மகள் என்பதிலிருந்து ஒரு நல்ல சோஷலிஸ்டாக மாற்றப்பட்டார். இலங்கையில் அரசியல் ஏமாற்று மிகவும் லேசாக நடைபெற்றது.

உண்மைகளைத் தலைகீழாக்க முடியாது. தொடர்ந்திருந்த சுதந்திரக் கட்சி அரசாங்கங்கள் அன்னியருக்குச் சொந்தமான தோட்டங்களை தேசியமயமாக்க மறுத்ததின் மூலம் தமது முதலாளித்துவ வர்க்க குணம்சத்தை நிரூபித்தன. முதலாளித்துவ வர்க்கம் நிலங்களை தேசிய மயமாக்க விரும்புவதில்லை. தனியார் புனித சொத்துரிமைக்குள் தலையிடுவதாக அமையும் என அது கருதுகிறது. இதன் காரணத்தினால்தான் ஸ்ரீமாவோவின் அரசாங்கம் சம்பளம் உயராமல் தடுப்பது, வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களோடு பேச மறுப்பது போன்ற தொழிலாளி வர்க்க விரோத கொள்கைகளை மேற்கொண்டது.

உண்மை என்னவெனில், தேசிய முதலாளி வர்க்கத்திற்கு இரு பக்கங்கள் உள்ளன ஒன்று நல்லது மற்றது கூடாதது. முற்போக்கு பக்கம் பிற்போக்கு பக்கம், ஏகாதிபத் எதிர்ப்பு பக்கம் தொழிலாளி வர்க்க எதிர்ப்பு பக்கம் என உள்ளன. ஏகாதிபத்தியத்துடன் உள்ள முரண்பாடு முற்றும்பொழுது பொது மக்களின் ஆதரவைப் பெறுவதற்காக அது தொழிலாளி வர்க்கத்தின் பக்கம் சேரும். அதற்குக் காரணம் அது சோஷலிஸ்ட் என்பதல்ல அதற்குப் பதிலாக தனது நலனைப் பாதுகாக்க அது தொழிலாளர்களை உபயோகிக்க விரும்புகிறது. ஆனால் எப்பொழுது தொழிலாளி வர்க்கம் சக்திபெறுகிறதோ அப்பொழுது அது பயப்படுகிறது. அதனால் ஏகாதிபத்தியத்திற்குபிற்போக்கிற்குக்கிட்டச் செல்கிறது. அடிப்படையில் அவர்கள் ஓர் ஊசலாட்டக் கூட்டமாகும்.

அவர்களின் நல்ல பக்கத்தை பாவிக்கவும் கூடாதபக்கத்தை எதிர்க்கவும், முற்போக்கு பக்கத்துடன் ஒத்துழைக்கவும் பிற்போக்கு பக்கத்தை நிராகரிக்கவும், ஏகாதிபத்தியத்தை எதிர்த்து போராடும் பொழுது பூரண ஆதரவு கொடுக்கவும் தொழிலாளி வர்க்கத்தை திருப்பி அவர்கள் தாக்கும் போது அதை எதிர்க்கவும் போராடவும் தொழிலாளி வர்க்கம் உணர்வு பெற்றிருக்க வேண்டும். இது தான் ஐக்கியமும் போராட்டமும் என்ற கொள்கையாகும்.

ஏகாதிபத்தியத்திற்கு, நிலப்பிரபுத்துவத்திற்கு, யூ. என். பிக்கு விரோதமான சகல சக்திகளையும் ஐக்கியப்படுத்துவது தான் தொழிலாளி வர்க்கத்தின் கொள்கையாக இருக்க வேண்டும். இந்த ஐக்கியப் முன்னணியில் சுதந்திரக் கட்சிக்கு ஓர் இடம் கடமை-இக் கடமை ஊசலாட்டமானது தற்காலிகமானது என்ற பொழுதிலும்-இருக்கிறது. ஏகாதிபத்திற்கு யூ. என் பிக்கும் எதிராக அவர்களுடன் ஐக்கியப் படவில்லையானால் நாம் மடையர்களாவோம்.

சுதந்திரக் கட்சியைப் பற்றி நாம் வீணான கனவுகள் காணக் கூடாது. தேசிய முதலாளி வர்க்கத்தை பிரதிநிதித்துவம் படுத்தும் கட்சி அது என்பது பற்றியும், ஒரு சில சோஷலிஸ சக்திகள் அங்குஇருந்த பொழுதிலும் அது ஒரு சோஷலிஷ கட்சியல்ல என்பதையும் நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். யு. என். பிக்கு எதிரான இயக்கத்தில் அது வகிக்கும் பாத்திரம் ஊசலாட்டமானது, தற்காலிகமானது என்பதை நாம் கவனத்திற் கொள்ள வேண்டும். சுதந்திரக் கட்சியின் ஆரம்பகால தலைவர்கள் பலரும், பண்டாரநாயக்காவின் நண்பர்களும் யு. என். பி. யுடன் சேருவதில் எவ்வித கஷ்டமுமிருக்கவில்லை என்பதே சுதந்திரக் கட்சியின் முதலாளித்துவ வர்க்க குணம்சத்தை எடுத்துக் காட்டுகிறது.

எந்தச் சந்தர்ப்பத்திலும் ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தின் தலைமையை இவர்களின் கைகளில் ஒப்படைப்பது மிகவும் பயங்கரமானதாகும். இறுதியான வெற்றியைப் பெறவேண்டுமானால் இத் தலைமை சமுதாயத்திலுள்ள மிகவும் சிறந்த புரட்சிகர இயக்கமான தொழிலாளி வர்க்கத்தின் கைகளில் உறுதியாக இருக்க வேண்டும்.

1966 நவம்பர் 1-ம் தேதியிலிருந்து 8-ந் தேதிவரை திரானுவில் நடந்த அல்பேனிய தொழிற் கடசியின் 5-வது மாநாட்டில்

தோழர் சண்முகதாசன் ஆற்றிய உரை

# அல்பேனியாவுக்கு வீர வணக்கம்

அன்புள்ள செயற்குழு அங்கத்தினர்களே!
அன்புத் தோழர்களே!

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த உங்களது 5 வது மாநாட்டில் கலந்து கொண்டு அதனுடைய தீர்மானங்களைக் கேட்பதில் பெருமளவு மகிழ்ச்சியும், பெருமையும் அடைந்துள்ளேன் என்பதை உங்களுக்குத் தெரியப் படுத்த விரும்புகிறேன். இம் மாநாடு அல்பேனியாவில் சோஷலிஸத்தின் முழு வெற்றிக்கும், வெற்றிப் பாதையில் மேலும் முன்னேறிச் செல்வதற்கும் முக்கியத்துவமாய் அமைவதோடு மட்டுமின்றி, சர்வதேச ரீதியிலும் மார்க்சிஸம்-லெனினிஸம் முன்னேறிச் செல்வதற்கும் ஒரு தூண்டுகோலாயும் அமைந்துள்ளது. மற்றைய நாட்டு மார்க்சிஸ—லெனினிஸ கட்சிகளின் பிரதிநிதிகளும் இங்கு இருப்பது கவனிக்கத் தக்கது.

## நன்றியும் நல்வாழ்த்துக்களும்

இரண்டாவதாக, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியினதும் அதன் மத்தியக் கமிட்டியினதும் சார்பிலும், இலங்கையிலுள்ள சகல முற்போக்கு இயக்கங்களின் சார்பிலும் உங்களுக்கும், உங்கள் மூலமாக தொழிற் கட்சி அங்கத்தினர்களுக்கும், சிறிய-ஆனால் வீரஞ் செறிந்த அல்பேனிய நாட்டு மக்களுக்கும் எமது உறுதியான ஒருமைப்பாட்டையும், உங்கள் மாநாடு வெற்றி பெற நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீங்கள், எமது மார்க்சிஸ—லெனினிஸக் கோட்டைக்கு மேற்கு அரணாக விளங்குகிறீர்கள். ஏகாதிபத்திய விரோதிகளாலும், நவீன திரிபுவாதிகளாலும், மற்றும் சகல பிற்போக்கு வாதிகளாலும் சூழப்பட்டுள்ள நீங்கள் அவற்றையெல்லாம் வெற்றிகரமாக மீறி சுத்தமான மார்க்சிஸ—லெனினிஸச் செம்பதாகையை உறுதியாகவும், நேராகவும் உயர்த்துகிறீர்கள் இதற்காக நாம் உங்களுக்குச் சிரம் தாழ்த்துவதோடு என்றும் நன்றியுடையவர்களாவோம்.

## உங்கள் அஞ்சாமை வியப்புக் குரியது

ஐரோப்பாவிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளில் தோழர் அன்வர் ஹோஜாவின் தலைமையிலுள்ள சரியான மத்திய குழுவின் கீழ், முதலில் துரோகி டிட்டோவினது சூழ்ச்சிக்கும், பின்னர் குருஷ்சோவினது பயமுறுத்தலுக்கும் நீங்கள் அடிபணிய மறுத்தீர்கள். குருஷ்சோவ் உங்களை சிறிய-இலங்கையின் ஐந்தில் ஒரு பங்கு சனத்தொகையைக் கொண்ட சின்னஞ் சிறிய நாடு என்று நினைத்துக் கொண்டார். முந்திய சோவியத் யூனியனின் பெருமையையும்—அதாவது ஒக்டோபர் புரட்சி மூலம் முதன் முதலில் சோஷலிஸ் அரசாங்கத்தை அமைத்து லெனின், ஸ்டாலின் ஆகியோரின் தலைமையில் சோஷலிஸத்தை நிர்மாணித்த முதல் நாடானபடியால் அதன் பெருமையையும் அதிகாரத்தையும் பிழையான வழியில் பாவித்து உங்களைப் பயமுறுத்தித் தவிடு பொடியாக்க எண்ணியிருந்தார்.

தைரியமும், மிகவும் புத்திகூர்மையும் வாய்ந்த தலைமையுடைய உங்கள் கட்சி, அந்த கஷ்டமான நாட்களில் உங்களை மனவுறுதியுடன் முன்னெடுத்துச் சென்றதைப் பார்க்கும் போது இன்று நாம் வியப்படைகின்றோம். குருஷ்சோவின் காலில் விழுவதிலும் பார்க்க புல்லைத் தின்போம் என்ற உங்களது கடும் உறுதியானது எமக்கு என்றுமில்லாத ஊக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. நீங்கள் ஒரு கையில் பிக்கானும் மறு கையில் துப்பாக்கியும் கொண்டு சோஷலிஸத்தை நிர்மாணித்துப் பாதுகாத்துள்ளீர்கள். நீங்கள் குருஷ்சோவினது திரிபுவாதத்திற்குக் காட்டிய தீரமும் கோட்பாடும் நிறைந்த எதிர்ப்பு எல்லா மார்க்சிஸ்ட்—லெனினிஸ்டுகளுக்கும் உண்மையான சகல புரட்சிவாதிகளுக்கும் வியப்பைக் கிளறியுள்ளது.

## திரிபுவாதிகளின் நிலை

பெரும் கோமாளியான குருஷ்சோவினது வீர நடை இன்றைய சரித்திர மேடையில் இல்லை. விழா ஒன்றும் இல்லாமலேயே அவர் பதவியிலிருந்தும் உதைத் தெறியப் பட்டுள்ளளார். ஆனால் அவரின் பின்னால் வந்தவர்கள் பயங் கொண்ட சுண்டெலியைப்போல் என்ன செய்வதென்றறியாமல் அங்கு மிங்கும் ஓடித்திரிகிறார்கள். அவர்கள், தம்மேல் பொழியும் எல்லாவற்றையும் வெற்றிகொள்ளும் தன்மை வாய்ந்த மார்க்சிஸ-லெனினிஸ மழையினின்றும் தப்பிக் கொள்வதற்கு அணைகட்டும் வீண் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். ஆனால் வீரஞ் செறிந்த சின்னஞ் சிறிய அல்பேனியா எதனாலும் வெற்றி கொள்ள முடியாத மார்க்சிஸ—லெனினிஸப் பதாகையின் கீழ் வெற்றிகரமாக முன்னேறிச் செல்கிறது. ஏகாதிபத்தியவாதிகளினாலும், நவீன திரிபுவாதிகளினாலும் என்றும் அழியாத மார்க்சிஸ—லெனினிஸத்தின் உண்மையையும், வெற்றியையும் தடுக்க முடியாது. இது சூரியன் கிழக்கில் எழுவது எவ்வளவு உண்மையோ அவ்வளவு உண்மையாகும்.

இன்று உலக ஏகாதிபத்தியம் தன் கடைசி அழிவை நோக்கிச் செல்கின்ற-உலகப் புரட்சி தனது முற்றுமுழுதான வெற்றியை நோக்கிவிறு நடைபோடுகின்ற-இச்சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த காலகட்டத்தில் வாழ்வது எவ்வளவு சிறப்போ, நமது கடமையும்-குறிப்பாக இன்று அரசியல் அதிகாரத்தை வென்றெடுத்துள்ள மார்க்சிஸ்ட்--லெனினிஸ்டுகளுடைய கடமையும் அவ்வளவு பெரியது.

## அன்றும் இன்றும்

இன்று நாம் வாழும் காலகட்டம், சிறப்பு வாய்ந்த ஒக்டோபர் புரட்சியின் பின் இருந்த நிலைமையை ஒத்தது. அன்று லெனின், துரோமிழைத்த சமூக ஜனநாயகக் கட்சியிலிருந்து விலகி வந்த புதிய சிறு குழுக்களுக்கும் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கும் வழிகாட்டுவதற்காக மூன்றாவது சர்வதேசியத்தை (கம்யூனிஸ்ட் அகிலம்-ஆர்) நிறுவினார். அன்று லெனின் காலத்தில் சமூக ஜனநாயகவாதிகள் என்ன செய்தார்களோ அதனையே இன்றைய நவீன திரிபுவாதிகளும் செய்கின்றார்கள். சரித்திரத்தின் சில்லும் ஒரு முழுவட்டத்தைச் சுற்றிவிட்டது. ஆனால் அது, இன்றைய நவீன திரிபுவாதத்தின் துரோகத்தையும் மீறி மிகவும் உயர்ந்த மட்டத்திற்குச் சென்றுள்ளது.

ஒக்டோபர் புரட்சிக்குச் சற்றுப் பின்னதாக புதிய சிறு குழுக்களுக்கும், சிறு கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கும் வழிகாட்ட லெனின் இருந்ததைப் போல, இன்று எங்களைப் புரட்சிகரப் பாதையில் வழி நடத்திச் செல்ல மா பெரும் தலைவரான மா சே-துங்கின் தலைமையிலுள்ள மிகப் பெரிய சீன கம்யூனிஸ்ட் கட்சியும், சிறப்பு வாய்ந்த அன்வர் ஹோஜாவின் தலைமையிலுள்ள உங்களது தொழிற் கட்சியும் இருக்கின்றன.


## லெனினின் தெளிவான கூற்று

அரசியல் அதிகாரத்தை வென்றெடுத்துள்ள கட்சிகள் ஏனைய இடங்களில் நடக்கும் புரட்சிக்கு எவ்வாறு உதவ வேண்டும் என்பது பற்றி லெனின் மிகவும் தெளிவான கருத்தைக் கொண்டிருந்தார். ''ஏற்ற தாழ்வான பொருளாதார, அரசியல் வளர்ச்சி முதலாளித்துவத்தின் முக்கிய நியதியாகும். எனவே, பல அல்லது, ஒரு முதலாளித்துவ நாட்டில் சோஷலிஸத்தின் வெற்றி சாத்தியம். அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதில் வெற்றி பெற்ற தொழிலாளி வர்க்கம், அந்நாட்டு முதலாளித்துவ உடைமைகளைப் பறித்தெடுத்து பின்-தன்னுடைய பொருளாதார வளர்ச்சியை சோஷலிஸத்தின் மூலம் கட்டி வளர்த்தபின்-மற்றைய நாடுகளுக்கு எதிராக தனித்து நிற்க முடியும். அதே நேரத்தில், மற்றைய முதலாளித்துவ நாடுகளிலுள்ள அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களைத் தன்பால் கவர்ந்து, அவர்களை அந்நாட்டு முதலாளித்துவத்திற்கு எதிராகப் புரட்சியைத் தூண்ட முடியும். அவ்வாறு புரட்சி செய்கின்ற தொழிலாளி வர்க்கம் தன்னைச் சமாளித்துக் கொள்ளாத நிலையில் அதற்கு மற்றைய சோஷலிஸ நாடுகள் உதவி செய்வது சோஷலிஸ நாடுகளின் கடமையும், உரிமையுமாகும்'' இக் கூற்று மிகவும் தெளிவானது; புரட்சிகரமானது.

## கடைப்பிடிக்க வேண்டிய அறிவுரை

இன்று சில நபர்கள்—சமீப காலம்வரை சரியான மார்க்சிஸ—லெனினிஸக் கண்ணோட்டத்தைக் கொண்டிருந்தவர்கள்—தம்மிலும் பார்க்க கூடிய அனுபவம் நிறைந்த மார்க்சிஸ—லெனினிஸக் கட்சிகளினால் வழிகாட்டப்பட்டவர்கள் தங்கள் கட்சியின் உள்விவகாரங்களில் தலையிடுவதாகக் குற்றம் சாட்டியுள்ளார்கள். இதேபோல் இவர்கள், அன்று மற்றைய நாட்டு கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு உதவிபுரிவதற்காக மூன்றாவது சர்வதேசியத்தை நிறுவிய லெனினையும், அந்நாட்டு கட்சிகளின் உள்விவகாரங்களில் தலையிட்டதாகக் குற்றம் சாட்டலாமே? அன்று லெனின், துரோகம் நிறைந்த சமூக ஜனநாயக கட்சியிலிருந்து பிரிந்து வந்த குழுக்களையும், கம்யூனிஸ்ட் கட்சிகளையும் பார்த்து, சமூக ஜனநாயகவாதிகளிடமிருந்து சித்தாந்தரீதியாகப் பிரிவதோடல்லாமல், இயக்க ரீதியாலும் அதனைக் கொண்டு நடத்தும் வழிவகைகள், பழக்க வழக்கங்கள் முதலியவற்றிலிருந்தும் பிரிந்து, வேறுபட்டு, பொல்ஷெவிக் கட்சியின் மாதிரியில்இயங்கவேண்டுமென்று அறிவுரை கூறினார். இதனையே இன்றைய சீனத் தோழர்களும் இன்று புதிதாக வளர்ந்துவரும் மார்க்சிஸ—லெனினிஸ கட்சிகளுக்கும், குழுக்களுக்கும் திரும்பப் போதனை செய்து வருகின்றனர். இந்த அறிவுரையை நாம் ஏற்றுக்கொள்ளாவிட்டால் நாம் வெற்றியடைய முடியாது. கறுப்பிலிருந்து வெள்ளை எப்படி வேறுபடுகிறதோ அதேபோல் எமது மார்க்சிஸ-

4-ம் பக்கம் பார்க்க



மகத்தான ஒக்டோபர் புரட்சியின் 50 வது ஆண்டு விழாவை ஒட்டி இம் மாதம் 9 ந் தேதி ஹட்டனில் தோழர் சண் சொற்பொழிவு நிகழ்த்தும்போது எடுக்கப்பட்ட படம்.

# இன்று உலக ஏகாதிபத்தியம் சாவை நோக்கிச் செல்கிறது

3-ம் பக்கத் தொடர்

லெனினிஸக் கட்சி நவீன திரிபுவாதத்திலிருந்தும் வேறுபடவேண்டும்.

## திரிபுவாதம் ஏகாதிபத்தியத்தின் ஏவல் நாய்

பாதி வழி செல்லும் பிரச்சினை இங்கில்லை. மார்க்சிஸ—லெனினிஸத்திற்கும் திரிபுவாதத்திற்குமிடையில் எந்தவிதமான விட்டுக்கொடுத்தலும் இருக்க முடியாது. நவீன திரிபுவாதம் இன்று சர்வ தேசிய கம்யூனிஸ்ட் இயக்கத்திற்குள் தவறுதலாக வழி நடத்திச் செல்லும் போக்கு அல்ல. நவீன திரிபுவாதம் இன்று உலக ஏகாதிபத்தியத்திற்கு சேவகம் செய்யும் ஏவல் நாயாக மாறிவிட்டது. திரிபுவாதிகளின் பொருளாதாரத்தில் லாபநோக்குக்கும், பொருளைச் சேர்ப்பதற்குத் தூண்டுதலுக்கும், இத்தாலிய முதலாளித்துவ நிறுவனமான பியற்வாதத்தை உதவிக்கு அழைத்துள்ளது. உளுத்த மரத்தைத் தாங்கும் முண்டு, அம் மரத்தின் பலவீனத்தைக் காட்டுகிறதேயன்றி அதனுடைய பலத்தையல்ல. அந்த முண்டினை வெட்டியெறிவதின் மூலம் நாம் மரத்தையே வீழ்த்தி விடலாம்.

## ஒரு சிலரின் போக்கு

இன்றைய நவீன திரிபுவாதத்திற்கும் மார்க்கிஸ—லெனினிஸத்திற்கும் இடையில், பக்கம் சேராமல் நடுநிலை வகிப்பதாகச் சிலர் சொல்லிக் கொள்கிறார்கள். இப் பெரிய போராட்டத்தில் தாம் நடுநிலை வகிப்பதாகச் சொல்லிக் கொள்பவர்கள், நவீனதிரிபுவாதத்தின் பக்கம் செல்லுவதற்குரிய முதல் அறிகுறியாகும். இன்னும் சிலர் தாங்கள் நவீன திரிபுவாதத்தையும், ஒரு முனைவாதக்கொள்கையையும் எதிர்ப்பதாகப் பிரகடனப் படுத்திக்கொள்கிறார்கள். திரிபுவாதம், ஒரு முனைவாதக் துங் மார்க்சிஸ - லெனினிஸத்தை மேலும் செழுமைப்படுத்தி வளர்த்துள்ளார். இதுவே இன்று மா சே-துங் சிந்தனை எனப் போற்றப்படுகிறது.

## மகத்தான சீனக் கலாச்சாரப் புரட்சி

லெனின் காலத்தில் யார் அவருக் கெதிராகத் தாக்குதல் நடத்தினர்களோ, அவர்கள் மார்க்சிஸத்தையே எதிர்த்தார்கள். அதுபோல இன்று யார் மா சே-துங் சிந்தனையை எதிர்க்கிறார்களோ அவர்கள் மார்க்சிஸ-லெனினிஸத்தின் அடிப்படைத் தத்துவத்தையே எதிர்க்கின்றார்கள். எனக்கு, சென்ற மாதத்தின் முற்பகுதியில் நடந்த சீன தேசிய தினக்கொண்டாட்டத்தில் கலந்து கொள்ளும் பேறு கிடைத்தது. அப்பொழுது அங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் மகத்தான தொழிலாளி வர்க்க கலாச்சாரப் புரட்சியையும் நேரில் கண்டேன். யூகோஸ்லேவியாவி

விடுதலையடையாத பகுதியிலுள்ள நாங்கள் இவ்வாறு தெளிவானதும் இதயபூர்வமான வார்த்தைகளைக் கேட்க அதிக காலம் பொறுத்திருக்க வேண்டியிருந்தது. இப்புரட்சிகரச் சிந்தனையில் உங்கள் கட்சியும், உங்கள் மக்களும் பங்கு கொண்டுள்ளதை அறிந்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். நவீன திரிபுவாதிகளினால் கீழே வீசப்பட்ட மார்க்கிஸ லெனினிஸச் செம்பாதாகையை எடுத்து, நேராக உயர்த்திப்பிடித்து, உலகப் புரட்சியின் வெற்றியை நோக்கி முன்செல்வதில் இந்த மாநாடு, சகல மார்க்சிஸ்ட் லெனினிஸ்டுகளுக்கும் ஒரு புதிய மன உறுதியையும், நம்பிக்கையையும், உற்சாகத்தையும் அளிக்குமென நான் திடமாக நம்புகின்றேன்.

## கற்க வேண்டிய முக்கிய பாடம்

சமீபகாலமாக மார்க்சிஸம்-லெனினிஸத்தைப் பின்பற்றுவோரின் எண்ணிக்கை அதிகரித்தபோதிலும், மார்க்சிஸ்ட்—லெனினிஸ்ட் இயக்கத்திற்கு சர்வதேச ரீதியில் பின்வாங்கலும் ஏற்பட்டுள்ளது. இதற்குக் காரணம் புரட்சிகர

பில் பரிசோதித்துப் பார்ப்பது போல் ஒவ்வொரு புரட்சியாளரையும் அவரது செயலின் மூலமே பரிசோதிக்க முடியும். ஓர் உண்மையான புரட்சியாளன் எல்லாக் கஷ்டங்களையும் எதிர்த்து, பல தியாகங்களையும் செய்து முன்னேறுவான்; துரோகிகளும், சந்தர்ப்பவாதிகளும் கயவர்களும் நவீன திரிபுவாதிகளின் பயமுறுத்தல்களுக்கும் விரட்டுகளுக்கும் இடம் கொடுத்துப் பலியாவார்கள், இத்தகைய சிறு தோல்விகளினால் திரிபுவாதிகள் மனச் சாந்தியடைந்தாலும் உலகிலுள்ள 95% விகிதமான அடக்கியொடுக்கப்பட்ட மக்கள் அனைவரும் இயற்கை நியதியான உலகப் புரட்சியின் பக்கமே உறுதியாகத் துணை நிற்கிறார்கள். இவர்கள் மார்க்சிஸ—லெனினிஸப் பலத்தைப் பெருக்கி, ஒருவராலும் தடுக்க முடியாத மார்க்சிஸ—லெனினிஸ வெற்றியை உலக ரீதியில் வென்றெடுப்பார்கள் என்பது திண்ணம்.

## எமது நாட்டு திரிபுவாதியின் அவதூறு

இப்போது நான், எனது நாட்டைப்பற்றிச் சில வார்த்தைகள் கூற விரும்புகின்றேன். முதலில் அல்பேனிய தொழிற் கட்சியிடம் மன்னிப்புக் கோரவேண்டியவனுயுள்

# உலக சோஷலிஸம் தனது வெற்றிப் பாதையில்

கார் கம்பெனியுடன் ஒப்பந்தம் செய்து அதன்மூலம் சோவியத் தொழிலாளர்களை இத்தாலிய முதலாளிகள் சுரண்டி லாபமடிக்கவும் இதுவும் போதாதென்று ஜப்பானிய—சோவியத் ஒப்பந்தங்கள் மூலம் சைபீரியாவிலுள்ள வளத்தைக் கொள்ளையடித்து அதன் மூலம் ஜப்பானிய முதலாளிகளை வளர்க்கவும் உதவுகிறது. இவற்றின் மூலம் இன்று சோவியத்தில் முதலாளித்துவம் புகுத்தப் படச்செய்கிறது.

கொள்கை — இவ்விரண்டிலும் இருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்வது சரியான செயலாகும். ஆனால் இவ்விரண்டினையும் எதிர்த்து போராடாமல் இருப்பது மிகவும் அபாயமும், துரோகமும் நிறைந்த செயலாகும். ஆனல் இன்றைய சர்வதேசிய கம்யூனிஸ்ட் இயக்கத்தினுள் ஒரு முனைவாதக் கொள்கையினுற்றான் பெரிய அபாயம் என்று கூறிக் கொள்வது பெரிய முடவாதமாகும். உண்மையாகப் பார்க்கப் போனால் இதுவுமோர் நவீன

விலும் சோவியத்திலும் நடந்தது போன்று இன்றைய சோஷலிஸ சீனவில் முதலாளித்துவம் மறுபடியும் சமாதான முறையில் வரும் என்று எண்ணியிருந்த ஏகாதிபத்தியவாதிகளுக்கும், நவீன திரிபுவாதிகளுக்கும் இக் கலாச்சாரப் புரட்சி பெரிய ஏமாற்றத்தையும், அதிர்ச்சியையும் கொடுத்துள்ளது. இன்றைய நவீன திரிபுவாதிகளும் ஏகாதிபத்தியவாதிகளும் உலகம் முழுவதும் சீன எதிர்ப்புக் கூச்சல் போடுவதற்கு இது தான்

# வீறு நடை போடுகிறது

இன்று வியட்நாமில் நடக்கும் வீரஞ் செறிந்த போராட்டத்திற்கு உதவி செய்வதாகக் கூறிக் கொள்ளும் அதே சமயத்தில், அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு ஏவல்நாயாக நின்று வியட்நாம் பிரச்சினையை சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கலாமென்றபொருளற்ற எண்ணங்களைத் திணிக்க முயற்சி செய்கிறார்கள். மேலும் ஏகாதிபத்தியத்துடன் இரகசியப் பேச்சுவார்த்தைகளும் பரிபூரண உடன்பாடும் கொண்டுள்ளார்கள். இத்தகைய செயல்களின் மூலம் நவீன திரிபுவாதிகள் தங்களின் சுயரூபத்தைக் காட்டுகிறார்கள். ஆனல் விழிப்பாய் இருப்பவர்களிடமிருந்து இவர்கள் தப்ப முடியாது. இன்று கடைசிச் சேடம் இழுத்துக் கொண்டிருக்கும் உலக ஏகாதிபத்தியம், உலகத் தொழிலாளர் வர்க்கத்தினிடமிருந்து தப்பிக் கொள்வதற்கும் நவீன திரிபு

திரிபுவாதமாகும். நாங்கள் ஒருமுனைவாதக் கொள்கைக்கு எதிராகப் போராட்டம் நடத்தும் பொழுது நவீன திரிபுவாதத்திற்குள் விழுந்து விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். மார்க்சிஸ லெனினிஸம், மற்றைய சமயக் கோட்பாடுகளை மனப்பாடம் செய்வது. போன்றதல்ல. இது நம்முடைய செயல் முறைக்கு வழிகாட்டும் ஒரு தத்துவமாகும் அத்துடன், மேலும் தொடர்ந்து வளரக்கூடிய தத்துவமாகும். லெனின், சோஷலிஸப் புரட்சிக் கட்டத்திலும் ஏகாதிபத்திய கால கட்டத்திலும் இதனைப் பாவித்து இத் தத்துவங்களைச் செழுமைப் படுத்தி வளர்த்துள்ளார். இன்று உலக ஏகாதிபத்தியம் தனது சாவை நோக்கிக்கொண்டும், உலக சோஷலிஸம் தனது வெற்றிப் பாதையில் வீறு நடைபோட்டுக் கொண்டு முள்ள இக் கால கட்டத்தில் தலைவர் மாசே-

காரணம். இது மிகவும் நல்லது. ஏனெனில், எதிரியினல் நீர் தாக்கப்பட்டால் நீர் சரியான பாதையில செல்கிறீர் என்பதுதான் அதன் அர்த்தம்.

இதை விட என்னைக் மிகவும் கவர்ந்தது யாதெனில், சீனத் தலைவர்களும், மக்களும் தாங்கள் வென்றெடுத்த புரட்சியை நிலை நிறுத்தி, தமது பொருளாதாரத்தை பெருக்கி வாழ்க்கைத் தரத்தை மேற்கத்திய நாடுகளின் தரத்திற்கு உயர்த்துவதோடல்லாமல், உலகப் புரட்சியின் வெற்றிக்குத் தமது கடமையையும், பங்கையும் தெளிவாகப் புரிந்து கொண்டிருப்பதுதான். இத்துடன், இன்னும் விடுதலையடையாத நாடுகளின் விடுதலைப் போராட்டத்திற்கு தாங்கள் செய்ய வேண்டிய உதவியையும் பங்கையும் அவர்கள் தமது மனதில் பதித்துக் கொண்டார்கள்.

இயக்கம் பலவிதமான வளைவுகளையும், ஏற்ற தாழ்வுகளையும் கொண்டுள்ளதுதான். இந்தோனேஷியாவில் ஒரு பலத்த அடி விழுந்துள்ளது. இது ஒரு தற்காலிகமான பின்வாங்கல். இங்கு, ரத்தவெறி பிடித்த பாசிஸ்டுகள் நமது லட்சக் கணக்கான தோழர்களை மிகவும் கொடூரமான முறையில் படுகொலை செய்து இராணுவச் சர்வாதிகார ஆட்சியை நிறுவியுள்ளனர்.

இதிலிருந்து நாம் ஒரு முக்கியமான பாடத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும். அது யாதெனில், தொழிலாளி வர்க்கம் சமாதான முறையில் அரசியல் அதிகாரத்திற்கு வருவதற்கு எந்த நாட்டு பிற்போக்கு சக்திகளும் அனுமதிக்கா என்பதும், ஒரு நாட்டில் தொழிலாளி வர்க்கமும் முற்போக்கு சக்திகளும் பிற்போக்கு சக்திகளை எதிர்த்து அறைகூவல் விடும்போது, எழும் கேள்வி யார் கழுத்தை யார் முதலில் வெட்டுவது என்பதுமாகும். தொழிலாளி வர்க்கமும் அதன் அணிகளும் இதனை அறிந்துணர்ந்து, பிற்போக்கு சக்திகளின் தாக்குதலை புரட்சிகரத் தாக்குதலினல் அடக்கியொடுக்கி முறியடிக்காவிட்டால் எதிர்ப்புரட்சி வாதிகள் பயங்கரமாக அவர்களின் கழுத்தை வெட்டி விடுவார்கள்.

முன்பெல்லாம் சர்வதேச மார்க்சிஸ்ட்—லெனினிஸ்ட் இயக்கத்துள் சரியான மார்க்சிஸ—லெனினிஸ நிலையைக் கொண்டிருந்த சிலர் இன்று தளம்பித் திரிகிறார்கள். உலோகத் தகட்டினை நெருப்

ளேன். சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 22-வது மாநாட்டில், எமது கட்சிக்குள் பிளவு ஏற்படுமுன் ஒரு திரிபுவாதியாயிருந்த எமது கட்சியின் பொதுக் காரியதரிசி, சோவியத் திரிபுவாதத் தலைவர்கள் உங்கள் தொழிற் கட்சியின் மேல் நடத்திய எதிர்த் தாக்குதலை ஆமோதித்து அவர்களுக்கேற்ப உங்கள் கட்சியின்மேல் அத் தாக்குதலை எதிரொலித்தார். குருஷ்சோவ் திரிபுவாதிகளின் விருப்பத்திற்கிணங்க உங்கள் கட்சியின் மேல் எமது கட்சியின் பொதுக் காரியதரிசி அரசியல் அவதூறுகள் பொழிய எமது கட்சியோ, கட்சி அங்கத்தினரோ, மத்திய குழுவோ, அல்லது எமது அரசியல் குழுவோ எதுவித அதிகாரத்தையும் அவருக்கு அளிக்கவில்லை என்பதை, இந்த வீரஞ்செறிந்த 5 வது மாநாட்டு மேடையில் நின்று சொல்லிக் கொள்ள இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்கின்றேன்.

இந்த உளுத்துப் போன திரிபுவாதத்திலிருந்து எம்மை விடுதலை செய்த பின்னர் கூடிய முதலாவது மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில், உங்கள் கட்சியின் மேல் பொழிந்த அவதூறை வாபஸ் பெற்று, நீங்கள் எடுத்த சரியான மார்க்சிஸ—லெனினிஸ நிலைக்கு முழு ஆதரவையும் தந்தோம். அன்று முதல் நாங்கள் உங்களை மரியாதையுடன் நன்றியுடனும் வியந்தோம். உங்கள் கொள்கைகள் பல இடங்களில் எங்களை சரியான முறையில் வழிகாட்டி பணபடுத்தியுள்ளது.

11-ம் பக்கம் பார்க்க

# தத்துவார்த்த கலாச்சாரப் புரட்சியில் அல்பேனியா ஈடுபட்டுள்ளது

அல்பேனிய தொழிலாளர் கட்சி மத்திய கமிட்டியின் அரசியல் குழு அங்கத்தினரும், அல்பேனிய மக்கள் குடியரசு அமைச்சரவையின் தலைவருமான தோழர் மொஹமத் ஷேஹூ, தமது தலைமையிலான அல்பேனிய கட்சி, அரசாங்கம் பிரதிநிதி குழுவை கௌரவித்துச் சீன நகரான டஸினில் நடைபெற்ற கூட்டத்தில் ஆற்றிய சொற்பொழிவின் முதற் பகுதியை சென்ற இதழில் வெளியிட்டோம். அதன் இரண்டாம் பகுதியை இங்கு தருகின்றோம்.

—ஆசிரியர்

அன்புள்ள தோழர்களே!

தொழிலாளர் கட்சியினதும் தோழர் அன்வர் ஹோஜாவினதும் தலைமையின் கீழ் அல்பேனிய மக்கள் குடியரசு தகர்க்க முடியாத, புரட்சிகர, சோஷலிஸ மார்க்சிஸ—லெனினிஸ கோட்டையைப் போன்று, அநேக எதிரிகளால் சூழப்பட்டு முதலாளித்துவ, திரிபுவாத ஐரோப்பாவின் மத்தியில் அட்றியாட்டிக் கடற்கரை ஓரத்தில் தலை தூக்கி நிற்கின்றது. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தனது புரட்சிகரக் கடமைகளை நிறைவேற்றி சிறந்த சாதனைகளுடன் ஒரு கையில் பிக்கானுடனும் மற்றக் கையில் துப்பாக்கியுடனும் தற்போது அல்பேனியா முன்னேறிச் செல்கின்றது.

எமது கட்சியின் ஐந்தாவது மாநாடு முடிவடைந்து இப்போது ஒரு வருடமாகிறது. எமது கட்சியினதும், எமது அரசுஅதிகாரத்தினதும்,எமது பொருளாதாரத்தினதும் வலிமையையும், ஐக்கியத்தையும் எமது சோஷலிஸ முறையையும் எமது அரசு அமைப்பையும், வெளிக்காட்டிற்று. தோழர் அன்வர் ஹோஜாவினல் தலைமை தாங்கப்படும் எமது கட்சி கடைப்பிடிக்கும் மார்க்சிஸ-லெனினிஸக் கொள்கையின் தவறின்மையை வெளிக்காட்டிற்று. மிகக் கொடூரமாக எமது கட்சியையும் எமது மக்களையும் தாக்கும் சோவியத் தலைவர்கள் தலைமை தாங்கும் நவீன திரிபுவாதிகளின் ஆபத்தான நடவடிக்கைகளின் பங்கலோட்டுத்தனத்தை வெளிக்காட்டிற்று. எமது சின்னஞ் சிறிய நாடாகிய அல்பேனியாவை தோற்கடிக்க முடியாதென்பதையும், ஏகாதிபத்திய வாதிகளினதும் திரிபு வாதிகளினதும் சதிகளுக்கும் தாக்குதல்களுக்கும் அது நின்று பிடித்துள்ள தோடல்லாமல், சோஷலிஸ அமைப்பின் பல முனைகளிலும் பிரமாண்டமான வெற்றிகளை வென்றெடுத்ததுடன் சதா முன்னேறிச் செல்வதையும் கட்சி மாநாடு காட்டிற்று.

## மாபெரும் ஐக்கியம்

எமது நாடு விடுதலையடைந்த பின்னர் எமது கட்சியும் மக்களும் தமது கஷ்டமான காலத்தில் வாழ்ந்து கொண்டிருந்தபோதும், அல்பேனியா தனக்கு அடிபணியும் என குருஷ்சோவ் 'தீர்க்க தரிசனம்' கூறிக் கொண்டிருந்தபோதும் கீர்த்திவாய்ந்த சீனக் கம்யூனிஸ்ட் கட்சியினதும் மாபெரும் சீன மக்களினதும் சகோதரத்துவ, பூரணமான சர்வதேச ரீதியான உதவியும் ஆதரவும் எமக்குக் கிடைத்தன. கடுமையான இயற்கைச் சேதங்களினால் ஏற்பட்ட கஷ்டங்களையும் குருஷ்சோவ் திரிபுவாதத்தினரும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும் தடைகளையும் தானே சமாளிக்க வேண்டியிருந்த நேரத்தில் மக்கள் சீனத்தினால் அளிக்கப்பட்ட தன்னலமற்ற உதவி, எமது இரு கட்சிகளையும், இரு நாடுகளையும், இரு மக்களையும் பிணைக்கும் மாபெரும் ஐக்கியத்தினதும் சிநேகத்தினதும் உன்னத வெளிப்பாடாகும்.

அன்புள்ள தோழர்களே!

அல்பேனிய கட்சி, அரசாங்கம் முழு அல்பேனிய மக்கள் ஆகியவற்றின் சார்பில், எமது நாட்டிற்கும் எமது மக்களுக்கும் நீங்கள் செய்த யாவற்றிற்கும், நீங்கள் செய்யும் யாவற்றிற்குமாக உங்கள் மாபெரும் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் உங்கள் அரசாங்கத்திற்கும், உங்கள் வீரமிக்க மக்களுக்கும், தலைவர் மா சே துங்கிற்கும் எனது இதயம் நிறைந்த நன்றியைத் தெரிவிக்க எனக்கு அனுமதி கொடுங்கள்.

## முக்கிய நோக்கம்

எமது நாட்டு முழு வாழ்க்கை, கட்சி, அரசாங்கம், உற்பத்தி, கல்வி, கலாச்சாரம் மக்கள் சிந்தனை ஆகியவற்றை மேலும் புரட்சிகர மயமாக்குவதற்கான திட்டமொன்றை—உழைப்பு, போராட்டத் திட்டம்-தயாரித்த மாநாடாக எமது கட்சியினதும், எமது மக்களினதும் சரித்திரத்திலும் எமது கட்சியின் ஐந்தாவது மாநாடு பொறிக்கப்படும். இவை சம்பந்தமாக எமது கட்சிச் சாஸனங்களில் காணப்படும் அநேக நடவடிக்கைகளும் தீர்மானங்களும் அண்மையில் எமது கட்சியினால் எடுக்கப்பட்டுள்ளன.

இளம் முன்னோடிகள் தொட்டு வயதுற்றோர் வரையிலான சகல உழைக்கும் மக்களையும் உள்ளடக்கிய மாபெரும் புரட்சிகர இயக்கம் பலத்துடன் விரிவடைகின்றது. இவ் வியக்கத்தின் உள்ளடக்கம் தான் என்ன? திரிபுவாதம் உற்பத்தியாகி தன்னை விருத்தி செய்யக் கூடிய சகல அத்திவாரங்களையும் தகர்த்தெறிவதும், முதலாளித்துவத்தை மீண்டும் புகுத்துவதற்கான பாதைக்குத் தடையிடுவதும் ஏற்கனவேபெற்ற வெற்றிகளை கட்டிக் காப்பதும், புரட்சியின் தொடர்ச்சியான வளர்ச்சியை உறுதிப் படுத்துவதும், அல்பேனியாவில் சோஷலிஸ கம்யூனிஸ வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்லுவதும் ஆகியனவே அதனுடைய முக்கிய நோக்கமாகும்.

## வர்க்கப் போராட்டத்தைக் கை விடக்கூடாது

இப்பிரச்சினையில், கீழ் வரும் மார்க்சிஸ-லெனினிஸ கோட்பாட்டின் அடிப்படையில்—அதாவது, சுரண்டும் வர்க்கம் ஒரு வர்க்கமாக இல்லாமற் செய்யப்பட்ட பின்னர் வர்க்கப் போராட்டம் தொடர்ந்து நடைபெறுவதுடன், முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிஸத்திற்கு மாற்ற மடையும் கால கட்டம் முழுவதிலும் பிரதான சமூகஇயக்கு சக்தியாகவுமுள்ளது. என்ற அடிப்படையில் முன்னேறிச் செல்வதென முடிவெடுத்துள்ளோம். உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வர்க்கப் போராட்டம் தொடர்ந்து நடைபெறும் போது சோஷலிஸத்தின் வெற்றி உறுதிப்படுத்தப்படாததுடன், முதலாளித்துவம் மீண்டும் புகுத்தப்படும் அபாயம் உள்ளது. இம் மீளப் புகுத்தல் வெளியிலிருந்து, ஏகாதிபத்திய ஆயுதரித்த ஆக்கிரமிப்பிலிருந்து மட்டுமல்லாமல், உள்ளேயிருந்து, முக்கியமாக பூர்ஷுவா, திரிபுவாத ஊடுருவல் மூலமாகவும் ஏற்படுகின்றது.

அல்பேனிய தொழிலாளர் கட்சியின் ஐந்தாவது மாநாட்டின் போது தோழர் ஹோஜா பின்வருமாறு கூறினர்: வர்க்கப் போராட்டத்தைக் கைவிடுவதற்கான ஏதாவது அறிகுறி சோஷலிஸத்தின் எதிர் காலத்திற்கு பயங்கரமான விளைவுகளை ஏற்படுத்தும். எனவே, உற்பத்தியை அதிகரிக்க முயற்சி யெடுக்கும் போதும், கலாச்சாரத்தையும் கல்வியையும் அபிவிருத்திசெய்யும் போதும், ஏகாதிபத்திய வாதிகளுடனும் திரிபுவாதிகளுடனும், வெளிநாட்டுஎதிரிகளுடனும் போராடும்போதும், உள்நாட்டில்வர்க்கப்போராட்டத்தைக் கைவிடவும் கூடாது, மறக்கவும் கூடாது. இல்லையேல் சரித்திரத்தினால் அளிக்கப் படும் கடுமையான தண்டனைக்கு ஆளாக வேண்டி நேரிடும்.

## கட்சி நடத்திய போராட்டம்

கட்சிக்கு உள்ளேயும் வெளியேயும் எமது கட்சி சரியான, இடைவிடாத வர்க்கப் போராட்டத்தைத் தொடர்ச்சியாக நடத்தியுள்ளது. சகல வர்க்க எதிரிகளுக்கும் எதிராகவும், கட்சிக்கு வெளியேயும் உள்ளேயும் உள்ள சகல எதிரிகளுக்கும் எதிராகவும் அதுஉறுதியாகப் போராடியுள்ளது.

மக்களை அடக்குவதற்கு முன்னர் வர்க்க எதிரிகள் கட்சியைத் தூக்கி எறிய வேண்டுமென்பதையும், எனவே கட்சியை எதிர்ப்பதற்கு கட்சிக்கு உள்ளேயும் வெளியேயுமுள்ள வர்க்க எதிரிகள் தமது நடவடிக்கைகளைத் தொடர்பு படுத்தியுள்ளனர் என்பதையும் எமது கட்சி எப்போதுமே உணர்ந்துள்ளது. தனது சரியான கொள்கையை பாதுகாப்பதற்கும்,மார்க்சிஸ-லெனினிஸக் கொள்கைகளையும் தனதுஅங்கத்தினரின் தூய்மையையும் பாதுகாப்பதற்கும்,வெளியேயிருந்து ஏற்படும் பயங்கர ஊடுருவலிலிருந்து கட்சியைப் பாதுகாப்பதற்கும் தொடர்ச்சியான புரட்சிகரப் போராட்டத்தை எமது கட்சி நடாத்தியுள்ளது. கட்சிக்குள்ளே எதிரிடையான கொள்கைகள் இருப்பதையும், கட்சியின் சிந்தனையினதும் நடவடிக்கையினதும் ஐக்கியத்திற்குக் குந்தகம் விளைவிக்கும்—கட்சிக்கும் மக்களுக்கும் பயங்கர ஆபத்தை ஏற்படுத்தும்-வெவ்வேறு பிரிவுகள் இருப்பதையும் எமது கட்சி அனுமதித்சாது. கட்சிக் கெதிரான, சோஷலிஸத்திற் கெதிரான கொள்கைகளைப் பின்னர் கடைப்பிடித்தவர்கள் பொருட்டு பொறுமையான விளக்கம், இணங்கச் செய்தல் முறைகளை அது கடைப்பிடித்தது. எனினும், இவர்கள், செய்யக் கூடிய குற்றங்களை செய்து கொண்டு, தமது பிழைகளைத் திருத்துவதற்கு மறுத்ததுடன், துரோகப் பாதையில் தொடர்ந்து சென்றபோது எமது கட்சி எதுவித தயக்கமுமின்றி தேவையான நடவடிக்கைகளை அவர்களுக்கெதிராக எடுத்தது.

## புரட்சிகர மயத்தின் முக்கிய அம்சங்கள்

கட்சி மக்களின் இருதயம், நரம்பு மட்டுமல்லாமல் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் முன்னணிச்சக்தியுமாகும். கட்சியைப் பலப்படுத்துவது டன் அதன் அங்கத்தவர்களின் ஐக்கியத்தைப் பாதுகாப்பது, வெகுஜனங்களுடன் அதனது தொடர்பைப் பலப்படுத்துதல், சோஷலிஸ நிர்மாணத்தின் சகல தொடர்புகளிலும் கட்சியின் முன்னணிப் பாத்திரத்தை அதிகரிப்பது, வேலை முறைகளையும் செயல் முறையையும் அபிவிருத்தி செய்தல் ஆகியவையே எமது கட்சியின் புரட்சிகர மயத்தை மேலும் அபிவிருத்தி செய்யக் கூடிய எமது வேலையின் முக்கியம் அம்சங்களாகும்.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை உறுதிப்படுத்துவதற்காக எமது கட்சியும் மக்களும் அதிகாரத்துவ வாதத்திற் கெதிராகவும் அதனைப் பரப்புவோர்களுக் கெதிராகவும் போராடுகின்றனர். அதிகாரத்துவ வாதத்திற்கும், அதிகாரத்துவ வாதிகளுக்கும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் பயங்கர எதிரிகளுக்கும் எதிராக உறுதியான போராட்டம் நடாத்தாவிடின் சோஷலிஸம் முதலாளித்துவத்திற்குச் சீரழிவதைத் தடுக்க முடியாதென்பதையும், அதிகாரத்துவ வாதத்திற்கும் அதிகாரத்துவ வாதிகளுக்கும் எதிரான போராட்டம் சோஷலிஸ சமுதாயத்தின் வர்க்கப் போராட்டத்தின் மிக முக்கிய அம்சமென்பதையும் சோவியத் யூனியனில் ஏற்பட்டுள்ள திரிபுவாத சோக வரலாற்றின் பாடம் தெளிவாகக் காட்டுகின்றது. இது ஒரு தொடர்ச்சியான, சிக்கலான போராட்டமாகும். வர்க்கங்கள் இருக்கும்வரை பாட்டாளி வர்க்க அரசு இருக்கும்போதுகூட வர்க்கப் போராட்டம் தொடர்ந்து நடைபெறும்.

சாராம்சத்தில், இப்போராட்டம், இயக்குநர்களுக்கும் வெகுஜனங்களுக்குமிடையிலும்—உழைக்கும் மக்களுக்கும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்குமிடையிலும் சரியான தொடர்பை ஏற்படுத்துவதுடன் இணைக்கப்பட்டுள்ளது. பொது மக்களிலும் பார்க்க அதிகப்படியான சலுகைகள் பெற்ற அதிகாரத்துவ வர்க்கம் உருவாகுவதைத் தடுப்பதிலும் மக்களின் ஊழியர்களாக இருக்க வேண்டியவர்கள் அவர்களின் எஜமானர்களாகாமல் தடுப்பதுமே அதன் நோக்கமாகும். இல்லையேல் அவர்கள் அரசு அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கும் முதலாளித்துவத்தை மீண்டும் புகுத்துவதற்கும் வழி ஏற்படும்.

இவ் அடிப்படைப் பிரச்சினையில் எப்போதுமே எமது கட்சி சரியான கொள்கையைக் கடைப்பிடித்து வந்துள்ளது. நம் நாட்டில் நடைபெருத சம்பவங்கள் திரிபுவாதிகள் அதிகாரத்திலுள்ள சோவியத் யூனியனிலும் மற்றும் ஐரோப்பிய சோஷலிஸ நாடுகளிலும் நடைபெற்றுள்ளன. அல்பேனியாவில் எதிர்ப் புரட்சிகர நடவடிக்கைகளுக்கு சமூக அடிப்படையைத் திரிபுவாதம் பெற்றுக்கொள்ள முடியாதிருப்பதை இது நிரூபிக்கின்றது. ஆனல் நாம் இப் பிரச்சினையை மிகவும் சிரத்தையுடன்

8-ம் பக்கம் பார்க்க

# சோஷலிஸப் பாதை

**இன்றைய உலகில் தலைசிறந்த மார்க்சிஸ்ட்-லெனினிஸ்டுகளில் ஒருவரும், அல்பேனியாவின் தலைவருமான தோழர் அன்வர் ஹோஜா அல்பேனியாவின் 20-வது தேசிய தின விழாவின் போது ஆற்றிய உரையை இங்கே வெளியிடுகின்றோம். ஆ-ர்**



தோழர் அன்வர் ஹோஜா

*அன்புத் தோழர்களே!*
*சகோதரிகளே!*
*சகோதரர்களே!*
*பிரிய நண்பர்களே!*

இன்று, நாடு பூராவிலும் உள்ள எமது சகல மக்களும் உலகெங்கிலுமுள்ள சகல தேசபக்த பிரஜைகளும் குதூகலித்து மகிழ்கின்றனர். அல்பேனியாவின் பழம்பெரும் சரித்திரத்தில் மகோன்னதமான விழாவைக் கொண்டாடுகின்றனர். எமது தந்தையர் நாட்டினது விடுதலை தினத்தின் 20வது ஆண்டு நிறைவை-மக்கள் ஜனநாயக ஆட்சியின் நினைவு விழாவை- கொண்டாடுகின்றனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் கட்சியின் மத்தியக் கமிட்டியின் சார்பிலும், மக்கள் அசெம்பிளியின் தலைமைக் குழுவின் சார்பிலும், அல்பேனிய ஜனநாயக முன்னணியின் சார்பிலும் உங்கள் அனைவர்க்கும் நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்க அனுமதியுங்கள். மகத்தான நவம்பர் விழாவுக்கு எமது வாழ்த்துக்கள்! இருபது வயது அடைந்துள்ள நவீன சோஷலிஸ அல்பேனியா நீடூழி வாழ்க!

உலக ரீதியாக எண்ணற்ற தோழர்களும் நண்பர்களும்—சமாதானம், சுதந்திரம், ஜனநாயகம், சோஷலிஸம் ஆகியவற்றிற்கான சக போராளிகளும் எமது மக்களின் இந்தத் திருவிழாக்களில் மனப்பூர்வமாகப் பங்கு கொள்கின்றனர். எமது மக்கள் மீதும் எமது தொழிற் கட்சி மீதும் நவீன அல்பேனியாவின் சகல உண்மையான நண்பர்களும் கொண்டுள்ள விசுவாசமான அன்புக்கும், தோழமை மிக்க ஆதரவுக்கும், ஒத்துழைப்புக்கும் உங்கள் பேராலும், எமது மக்கள் பேராலும், எமது கட்சியின் பேராலும் அவர்களுக்கு எமது உளம் கனிந்த—மனம் நிறைந்த நன்றியறிதலைத் தெரிவிக்க அனுமதியுங்கள். அவர்களது நட்புறவும், தோழமை மிக்க ஆதரவும் எப்போதும் எமக்குப் புனிதமானதாய் இருந்து வந்துள்ளது. இருந்து வருகின்றது. இனி மேலும் இருந்து வரும். அவை எமது மக்களின் சகல சாதனைகளிலும் பிரிக்க முடியாத முக்கிய அம்சங்களாய் உள்ளன. எமது புதிய அல்பேனியாவின் சுபிட்சத்திற்கான எமது நியாயமான போராட்டத்திற்கு—பரிபூரணமான சோஷலிஸ நிர்மாணத்திற்கு—மகத்தான நோக்கமான மார்க்சிஸ—லெனினிஸத்தின் வெற்றிக்கு-நாம் துரிதமாய் முன்னேறுவதற்கு அவை எமக்குப் பெரும் உற்சாகமளிப்பதாய் உள்ளன.

## தியாகிகளுக்கு அஞ்சலி

மகிழ்ச்சிக்குரிய இவ் வேளையில், எமது சோஷலிஸ—விடுதலை பெற்ற சுதந்திர-அல்பேனியாவின் இன்ப வாழ்வு நடத்தும் நாம், எமக்கு இந்த வாழ்வை அளிப்பதற்காக இரத்தத்தையும், உயிரையும் தியாகம் செய்து 1912 நவம்பர் 28-ம் தினத்தையும், 1944 நவம்பர் 29-ம் தினத்தையும் தேடித்தந்த அந்த எண்ணற்ற தியாகிகளை நன்மதிப்புடனும், ஆழ்ந்த உணர்வுடனும், என்றும் கடமைப்பட்டவர்களாய் நினைவு கூருவோம். தேசிய விடுதலைப் போராட்டத்தின் வீரமிக்க போராளிகளை—புரட்சிகர தேசபக்த செம்மல்களை—நினைவு படுத்தி, தேசிய விடுதலை யுத்தத்தின் புகழ் மிக்க தியாகிகளை நினைவு படுத்தி, சோஷலிஸ நிர்மாணத்தில் உயிர் துறந்த தியாகிகளை நினைவு படுத்தி எழுந்து நின்று வணக்கம் செய்வோம். (யாவரும் எழுந்து நின்று மௌன வணக்கம் செய்தனர்)

அன்புத் தோழர்களே!

1944 நவம்பர் 29-ந் தேதி எமது நாட்டின் சரித்திரத்தில் பொன்னான பாரம்பரியத்தின் நிகழ்ச்சியாக — ஒப்புயர்வற்ற அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாக—எமது மக்களுக்கு சுதந்திரத்தையும், மக்கள் கட்சியையும் உருவாக்கிய அல்பேனிய மக்கள் குடியரசைத் தோற்றுவித்த—சோஷலிஸத்தையும், கம்யூனிஸத்தையும் நாடி முன்னேறுகின்ற—தினமாக மிளிர்கிறது. அல்பேனிய மக்கள் தம்மை ஒழித்துக்கட்ட முனைந்த பல எதிரிகளுக்கெதிராக, நூற்றுக்கணக்கான வருடங்கள் ஆயுதங்களினாலும், பேனாவினாலும் இரத்தமும் வியர்வையும் சிந்தி போராட்டங்கள் நடத்தினர். சாதனை மிகுந்த இடைவிடாத போராட்டங்கள் பல நடத்தினர். இவற்றிற்கெல்லாம் உயர்ந்த பயனளிப்பதாய் அமைந்துள்ளது 1944 நவம்பர் 29-ந் தேதி நிகழ்ச்சி.

## மக்கள் குடியரசின் தோற்றம்

ஐம்பத்திரண்டு வருடங்களுக்கு முன் 1912 நவம்பர் 28-ந் தேதி எமது மக்கள் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த வெற்றி ஒன்றை ஈட்டினர். துருக்கியர் (ஒட்டமன்) சாம்ராஜ்யத்தின் பிடிகளிலிருந்து தம்மை விடுவித்து சுதந்திரத்தைப் பிரகடனம் செய்தனர். இது பெரும் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி. உலகில், அல்பேனியா தனி இராஜ்யமாக-சுதந்திர நாடாக வெளிவந்தது இதுதான் முதல் தடவை. ஆனால் எமது மக்களின் மாபெரும் வெற்றி, உள்நாட்டு மக்கள் விரோதிகளின் நலன்களுக்காகவும், சிற்றரசன் ஸ்சொக் (Zog)கின் நலன்களுக்காகவும், பயன்படுத்தப் பட்டது. இதன் பலனாக 1939ம் ஆண்டு எமது நாடு பாசிஸ ஆக்கிரமிப்பாளர்களினால் கொள்ளையடிக்கப்பட்டது. 1944 நவம்பர் 29ந் தேதி எமது மக்கள் உண்மையான சுதந்திரத்தை-சுய கௌரவத்தை — விடுதலையை அடைந்தனர்.

எமது நாட்டின் சரித்திரத்தில் நவம்பர் 29ந் தேதி இரு உலகங்களின் எல்லைக் கோடாக உள்ளது. முந்தியதில் எமது மக்கள் ''பலம் வாய்ந்தவர்களால்'' என்றும் நசுக்கப்பட்டு வந்தனர். எந்தவித உரிமைகளும் இல்லாதவர்களாய் இருந்தனர். பின்னையதில் தமது வருங்காலத்தை நிர்ணயிக்கும் சர்வ வல்லமையுடைய அதிகாரிகளாய் மாறினர். எமது நாட்டு உழைக்கும் மக்கள் கட்சியினால் வழிகாட்டப்பட்டு இந்த மகத்தான சரித்திர நிகழ்ச்சியை 1946 ஜனவரி 11ந் தேதி அங்கீகரித்தனர். மக்கள் விரோத ஆட்சிக்கு இனி இடமில்லை. எனச் சதவைச் சாத்தினர். சகல அதிகாரங்களும் மக்களிடமிருந்து தோன்றி, மக்களுக்காக உள்ள மக்கள் குடியரசை உலகறியப் பிரகடனம் செய்தனர்.

## சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த வெற்றி

எமது உழைக்கும் மக்கள், திறமையான முறையில் அணிதிரண்டுள்ள மிகவும் புரட்சிகரமான, வீரமிக்க தொழிலாளி வர்க்கத்தை முன்னணியாகக் கொண்டு ஒருமார்க்சிஸ-லெனினிஸ கட்சியினால்- அதாவது அல்பேனிய கம்யூனிஸட் கட்சியினால் (இன்று அல்பேனிய தொழிற் கட்சி) வழிநடத்தப்பட்டு, இடைவழியில் நின்றுவிடாது 1944 நவம்பர் 29ந் தேதியினதும், 1946 ஜனவரி 11ந் திகதியினதும் சாதனைகளை முன்னெடுத்துச் சென்று, சோஷலிஸப் பாதையில் புரட்சியை இடைவிடாது வளர்த்துச் சென்றனர். இதன் மூலம் நடத்தினர். நூற்றுக்கணக்கான வருடங்களுக்கு மறக்க முடியாதபடி ஒரு வரலாற்கு காவியத்திற்கு முற்றும் புள்ளி வைத்தனர்.

## கட்சியின் அறைகூவல்

தேசிய விடுதலை யுத்தத்திற்கு ஊக்கமளித்து, அணிதிரட்டி வழிகாட்டிய அல்பேனிய கம்யூனிஸ்ட் கட்சி பாசிஸ அடக்கு முறையின் நெருக்கடியான நிலையில்—அல்பேனிய மக்களின் சரித்திரத்தில் மிகவும் நெருக்கடியான காலகட்டத்தில்—மார்க்சிஸ —லெனினிஸத்தின் உறுதியான கோட்பாட்டின் அடிப்படையில் தோன்றி எமது மக்களின் சிறந்த பாரம்பரியத்தையும், நற்குணங்களையும்கொண்டுள்ளது.

பாசிஸ ஆக்கிரமிப்பையும், சர்வதேசியத்தையும் தொடர்ந்த நிலைமையை அல்பேனிய கம்யூனிஸ்ட் கட்சி மார்க்சிஸ—லெனினிஸ அடிப்படையில் ஆழமாகவும், ஆக்கபூர்வமாகவும் ஆராய்ந்து, யுத்தத்திற்கும் நடவடிக்கைக்குமான தெளிவான வேலைத் திட்டத்தை உருவாக்கியது. இவ்வேலைத் திட்டம் பாசிஸ ஆக்கிரமிப்பாளர்களுக்கும், உள்நாட்டு துரோகிகளுக்கும் எதிரான-விட்டுக்கொடுக்காத ஆயுதப் போராட்டத்திற்கான வேலைத் திட்டத்தையும், ஆக்கிரமிப்பாளர்களினதும், சுரண்டும் வர்க்கங்களினதும் மக்கள் விரோத பிற்போக்கு ஆட்சியைத் தூக்கி எறிவதற்கான வேலைத் திட்டத்தையும், ஒரு நேர்மையான ஜனநாயக மக்கள் ஆட்சியை அல்பேனியாவில் நிறுவுவதற்கான வேலைத் திட்டத்தையும், பெருமளவு பொருளாதார சமூக சீர்திருத்தங்களை ஏற்படுத்தக் கூடிய வேலைத் திட்டத்தையும் கொ டிருந்தது. கட்சி தோன்றிய ஆரம்ப காலத்திலேயே இந்தப் புரட்சிகர வேலைத் திட்டத்தை நிறைவேற்றும் போராட்டத்தில் குதிக்கும்படி மக்களை அறைகூவி அழைத்தது.

# சோஷலிஸ நிர்மாணத்திற்கான

# அல்பேனிய மக்களின் மற்றுமொ

நவம்பர் 29ந் தேதி எமது மக்களுக்கு, மனிதனை மனிதன் சுரண்டாத சமுதாயத்திற்கான போராட்டத்திற்கு—சோஷலிஸத்திற்கும் கம்யூனிஸத்திற்குமான போராட்டத்திற்கான — சகாப்தத்தைத் தோற்றுவித்தது.

1944 நவம்பர் 29ந் தேதி சுயாதிபத்தியமுள்ள அல்பேனிய அரசின் மறு பிறப்பை உலகம் அறிந்தது. ஆனால் அது புதிய அடிப்படையான மறு பிறப்பாய் இருந்தது. பொருளாதார, அரசியல், இராணுவ ரீதியில் ஒரு புது முறையான சுதந்திர அரசு-ஏகாதிபத்தியத்திற்கு அடிபணியாத அரசு-ஏகாதிபத்தியத்தின் கொள்ளை அடிக்கின்ற, அடக்கி ஆள்கின்ற திட்டங்களுக்கு இடம் கொடுத்த ஜனநாயக சோஷலிஸ முகாமின் மதிப்புக்குரிய அங்கமாக அமைந்தது.

1944 நவம்பர் 29ந் தேதியின் வெற்றி அத்தகைய சரித்திரமுக்கியத்துவம் வாய்ந்தது. இந்த வெற்றியை ஈட்டுவதற்கு, எமது மக்கள் வீரமிக்க தேசிய விடுதலை யுத்தத்தை

## மலைகள் கர்ஜிக்கத் தொடங்கின

யுத்தத்தின்போது பெரும் இன்னல்கள் நேரும் என்பதையும், எண்ணிலடங்காத தியா

# …தையில் அல்பேனியா

…கங்கள் செய்ய வேண்டி உள்ளது என்பதையும் கட்சி மக்களுக்கு ஒளிவு மறைவின்றிக் கூறியது. ஐரோப்பாவின் எஜமானர்களாயிருந்த—சக்தி மிக்க ஆயுதபாணிகளான—இத்தாலிய, ஜர்மன் பாசிஸ்டுகளும் தேசிய முன்னணியிலும் சட்டபூர்வமான இயக்கங்களிலும் உள்ள உள்நாட்டுத் துரோகிகளும் விடுதலை இயக்கத்தை பலாத்காரத்தினலும் சூழ்ச்சிகளினலும் தோற்கடிக்க முனைந்ததற்கு எதிராக மக்களும் கட்சியும் எதிர்த்துநின்று போராடின. யுத்த காலத்திலிருந்தே நேச நாடுகளாயிருந்த அமெரிக்காவினலும், பிரிட்டனலும், டிட்டோவாதிகளாலும் அல்பேனிய மக்களுக்கு உண்மையான அபாயம் காத்திருந்தது. அவர்கள் மக்களின் வெற்றியை அபகரித்து எமது நாட்டை தமது ஆணையின்கீழ் அடிபணியச் செய்ய தம்மாலான சகலவற்றையும் செய்தனர்.

கடசியின் வேலைத் திட்டத்தைஅமுல் நடத்துகையில், எமது மக்கள் இவர்கள் அனைவருக்கும் எதிராக ஆயுதம் ஏந்திப் போராடினர். அடக்குமுறையினலும், சுரண்டலினலும் களைப்படைந்த போதிலும்—பட்டினியால் வாடிய போதிலும்—சப்பாத்துக்களின்றி, எதிரியிடமிருந்து பறித்தெடுத்த சொற்பமான றைபில் துப்பாக்கிகளுடனும்,

மிக்கப் பாதையிலிருந்து தடுத்து நிறுத்த முடியவில்லை.

## புரட்சிகர மக்கள் சேனையின் தோற்றம்

இந்தப் பூதாகாரமான யுத்தத்தின்போதுதான் கட்சியின் தலைமையில் தொழிலாளி வர்க்கத்திற்கும், வீரமிக்க விவசாயிகளுக்கும, சகல தேசபக்த முற்போக்கு சக்திகளுக்குமிடையிலான ஐக்கியம் உருவாக்கப்பட்டது. இவர்கள் பாசிஸ விரோத தேசிய விடுதலை முன்னணியில் சேர்ந்தனர். யுத்தத்தின்போதுதான் கட்சியின் வழிகாட்டலின் பேரில் மக்கள் மத்தியில் இப் புரட்சிகர மக்கள் சேனை தோன்றியது; வளர்ந்தது. வெல்ல முடியாத போர்ப் படையாக மக்களின் அடிப்படை நலன்களுக்கு என்றும் விசுவாசமான சேனையாக உருவாகியது. யுத்தத்தின் சூட்டோடுதான் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் ஆக்கிரமிப்பாளர்களினதும் துரோகிகளினதும் மக்கள் விரோத ஆட்சிதகர்த்தெறியப்பட்டது. பழைய அரசியல் அமைப்பின் அழிவின்மேல் நாடு பூராவும் தேசிய விடுதலை கௌன்சில்கள் தேசிய விடுதலை யுத்தத்தின் அங்கங்களாக—மக்கள் ஆட்சியின் தோற்றுவாய்களாக நிறுவப்பட்டன.

நாட்டின் விடுதலைக்காக ஆக்கிரமிப்பாளர்களையும்,

தான் ஒழித்துக்கட்டியது. எமது மக்களின் தேசிய விடுதலை யுத்தத்தை, மகத்தான சோவியத் செஞ்சேனையினதும் சோவியத் மக்களினதும் பாசிஸக் கூட்டத்திற்கெதிரான பிரமாண்டமான விடுதலை யுத்தத்துடன் பிரிக்க முடியாத வகையில் இணைத்தது. எமது நாட்டின் விடுதலைக்குக்கூட இது பிரத்தியேகமான காரணமாய் இருந்தது.

## சக்திமிக்க சர்வதேச ஆதரவு

பாசிஸத்தை எதிர்த்த எமது பொதுவான போராட்டத்தின்போது அல்பேனியக் கம்யூனிஸ்ட் கட்சியினல் பேணி வளர்க்கப்பட்ட எமது நண்பர்களான சோவியத் மக்களுடனுள்ள உயிருள்ள வரையிலான நட்புறவு, யுத்தத்தின் நெருக்கடியான காலங்களில் எமது மக்களுக்கு உணர்வையும், வெற்றி பெறுவோம் என்ற உறுதியான நம்பிக்கையையும் ஊட்டியது. விடுதலைக்குப் பின் மறுபிறப்பெடுத்த எமது நாட்டுக்கு அது, சக்திமிக்க சர்வதேச ஆதரவாகவும் இருந்தது. போராட்ட உணர்வு மிக்க இந்த ஐக்கியம் பலகாலம் வாழ்ந்திருக்கும்.

அல்பேனிய கம்யூனிஸ்ட் கட்சியின் தெளிவான உறுதியான மார்க்சிஸ—லெனினிஸக் கொள்கை உழைக்கும் மக்களினது வருங்காலத்தையும், எமது நாட்டின் வருங்காலத்தையும் வளம் படுத்தியது. இக் கொள்கையின் காரணமாக ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்தும் துரோகிகளிடமிருந்தும் நாட்டை விடுவிக்க முடிந்ததோடல்லாமல், கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் ஆட்சியைப் பூரணமாகக் கைப்பற்றவும் முடிந்தது. இதன் பலனக நாடு ஒளிமயமான சோஷலிஸப் பாதையில் முன்னேறவும் முடிந்தது.

தேசிய விடுதலை யுத்தத்தின் சூட்டோடு எமது கட்சியும் எமது மக்களும் பெரும் வெற்றி ஈட்டியது மட்டுமல்லாமல், புடம் போடப்பட்டு பெரும் சரித்திர அனுபவத்தையும் பெற்றனர். மார்க்சிஸ—லெனினிஸத்தின் சரியான தன்மை எமது புரட்சியின் உதாரணத்தால் திரும்பவும் நிரூபிக்கப்பட்டது. அது நவீன திரிபுவாதிகளின் போதனைகளை நிராகரித்தது. நவீன திரிபுவாதிகள் சகல விடுதலை, புரட்சிகர யுத்தங்களையும் மாசுபடுத்த முனைகின்றனர். ஏகாதிபத்தியத்தைப் பற்றியும் பலவிதமான மயக்கங்களைப் பரப்பி மக்களை விடுவிக்கும் முறை எனக் கூறி பல தவருன பாதைகளைக் காட்டுகின்றனர். எமது புரட்சியின் உதாரணங்கள் இவற்றை நிராகரிக்கின்றன.

## சுதந்திரம் பிறர் தரும் பரிசல்ல

எல்லாவற்றிற்கும் மேலாக, சுதந்திரம் எவராலும் தரப்படுவதில்லை. மக்களின் சுதந்திரத்தினதும் விடுதலையினதும் பரம வைரிகளான ஏகாதிபத்தியவாதிகள் சுதந்திரத்தைப்



அல்பேனிய விடுதலைக்கு உறுதுணையாக நின்ற தோழர் ஸ்டாலின்

பரிசாகத் தருவார் என எண்ணிக் காத்திருக்கக் கூடாது. ஏகாதிபத்தியத்தைப் பற்றி எவ்வித மயக்கமும் கொள்ளக்கூடாது. அதன் ஏமாற்று வார்த்தைகளை ஒரு போதும் கணக்கில் எடுக்கக் கூடாது என்பனவற்றை எமது அனுபவங்கள் காட்டுகின்றன. தேசிய விடுதலையும், சமூக விமோசனமும் ஒவ்வொரு நாட்டு மக்களும்—பரந்த உழைக்கும் மக்களும்-தாமாக வென்றெடுக்க வேண்டியவை, அவர்களின் உறுதியான—கஷ்டமான போராட்டத்தின் மூலம பெறப்படுபவை என்பது எமது அனுபவம்.

மக்களின் புரட்சியை நடத்துவதற்கும் அதன் வெற்றிகளைப் பாதுகாப்பதற்கும் ஓர் அரசியல் ராணுவம், மக்கள் மத்தியிலுள்ள சகல தேசபக்த புரட்சிகர சக்திகளின் ஐக்கியம், தொழிலாளி விவசாயி ஐக்கியத்தை மையமாகக் கொண்ட ஐக்கியம் இன்றியமையாதது என்பதை எமது அனுபவம் காட்டுகின்றது. இந்த ஐக்கியத்தை நாம், கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் பாசிஸ—விரோத தேசிய விடுதலை முன்னணியின் மூலம் உருவாக்கினேம்.

## எமது அனுபவம்

புரட்சிகரமான மக்கள் சேனை, மக்களினதும் நாட்டினதும் நலன்களுக்கு அளவிட முடியாதளவு விசுவாசமுள்ள

10-ம் பக்கம் பார்க்க


# …ற்கான போராட்டம்

# …றுமொரு வீர காவியம்

றவை குண்டுகளுடனும் துணிகரமாக எழுந்து நின்று போராடினர். காலப்போக்கில் எமது மலைகள் கர்ஜிக்கத் தொடங்கின. அல்பேனியர்கள் ஒருமித்த சக்தியாக எழுந்து நின்றனர். எதிரிகள் அட்டகாசம் செய்தனர்; மக்களைத் துன்புறுத்தினர்; நாடு கடத்தினர்; சிறையில் அடைத்தனர்; கைது செய்தவர்களைச் சுட்டுக் கொன்றனர்; தூக்கிவிட்டனர்; பைத்தியக்காரர்களைப்போல் காட்டுமிராண்டித்தனமாக நாட்டைத் தீயிட்டு நாசப்படுத்தினர். பாசிஸத்தை எதிர்த்த யுத்தத்திலும், விடுதலைப் போராட்டத்திலும் எமது மக்கள் இருபத்தெண்ணுயிரம் உயிர்களைத் தியாகம் செய்தனர். இரண்டாவது யுத்தத்தில் உயிரிழந்தவர்களைப்பொறுத்தவரை—பிரதேசத்தையும் எண்ணிக்கையையும் ஒப்பிடுகையில்—எமது நாட்டில்தான் அதிகமான உயிர்ச் சேதமும், பொருட் சேதமும் ஏற்பட்டது. ஆனல் இவை எதனலுமே எமது மக்களைப் புகழ்

துரோகிகளையும் எதிர்த்துப் போராடுகையில், அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றும் பிரச்சினை புரட்சியின் அடிப்படைப் பிரச்சினை என்பதை அல்பேனிய கம்யூனிஸ்ட் கட்சி மறந்துவிடவில்லை. சுரண்டும் வர்க்கங்களையும், வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளர்களின் அடிவருடிகளையும் மக்களின் வெற்றிகளைக் களவாடி—தாமாக ஒரு படி கூடத் தீட்டாமலே—ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற விடவில்லை. புரட்சிகர யுத்தத்தில் உண்மையான நண்பர்கள் யார், எதிரிகள் யார் என்பதை கட்சி சரியாகக் கணித்துக்கொண்டது; வரையறுத்துக் கொண்டது. ஆதரிப்பதாகக் கூறிக்கொண்டு அல்பேனியாவைக் கைப்பற்ற எடுத்த முயற்சிகளை—மியூனிச்சின் துரோகமான சமரசத்தை ஆக்கிரமிப்புப் படைகளுடன் ஆங்கில அமெரிக்க தூதராலயங்கள் நடத்திய சதிகளை—தேசத் துரோகிகளை—மெடிற்றறேனியன் ''நேச'' சக்திகளின் சதிகளை கட்சி, மார்க்சிஸ—லெனினிஸத் துணிவுடனும் உறுதியுடனும்

அல்பேனியா




6 ஜ்ட்ரோக்ஸ்ட்ரா (மேலே) 6 ஷ்கொட்ரா 7 எல்பாசனி

# பெண்களின் அடிமைத்தளைகள் தூள் தூளாயின

—5-ம் பக்கத் தொடர்

கவனத்தில் எடுத்துள்ளோம். அரசியல், தத்துவார்த்த முக்கியத்துவமுள்ள அநேக நடவடிக்கைகளை நம்நாடு அண்மையில் எடுத்துள்ளது. உதாரணமாக, இருதடவைகள் உயர்ந்த சம்பளங்களைக் குறைத்து, கீழ், நடுத்தரச் சம்பளம் பெறுபவர்களைப் பாதிக்காமல் மிகவும் நியாயமான சம்பள விகிதங்களை நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளோம். அரசாங்க உத்தியோகத்தர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள், சகல புத்தி ஜீவிகள், இளைஞர்கள், மாணவர்கள் ஆகியோர் தொழிலாளர்கள், விவசாயிகளுடன் எங்கும், உற்பத்தி வேலையில் நேரடியாகப் பங்கு கொள்கின்றனர். இயக்குநர்கள் திட்டமிடப்பட்ட முறையில் மத்திய அதிகாரிகளுக்கும் கீழ்த்தர ஊழியர்களுக்குமிடையில் அடிக்கடி மாற்றப்படுவதுடன், கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தவர்களும் அரசாங்க நிறுவனங்களிலுள்ள சகல உயர்தர உத்தியோகத்தர்களும் மக்களின் கடுமையான கண்காணிப்பிலுள்ளனர். அரசு அதிகாரத்தின் மக்களினால் தெரிவு செய்யப்படும் அவற்றின் அதிகாரிகளினதும் தேர்தல் அங்கங்களினதும் கடமைகள், அவற்றின் செயல்துறை, அதிகாரங்கள் ஆகியவற்றை அதிகரித்துள்ளதுடன், ஜனநாயக மத்தியத்துவத்தை பூரணமாக நாம் அமுல்படுத்துவதுடன், அதிகாரத்துவவாத மத்தியத்துவத்தின் எத்தகைய வெளிப்பாடுகளையும் எதிர்த்தும்போராடுகின்றோம். வேலை முறைகளையும், செயல்முறைகளையும் அபிவிருத்தி செய்து அரசு அதிகாரத்தின் அங்கங்களின் முக்கிய கவனத்தை, தற்போது மக்களின் எண்ணத்திலுள்ள நடைமுறைப் பிரச்சினைகள் சம்பந்தமான வேலைகள் பொருட்டும், தீர்மானங்களும் கடமைகளும் எவ்வாறு செயற்படுத்தப்படுகின்றதென்பதைப் பரிசோதிப்பதற்கும், அரசாங்க பொருளாதாரப் பிரச்சினைகளை தொழில் நுட்பக் கண்ணோட்டத்திலிருந்து மட்டுமே பார்ப்பதிலிருந்து தவிர்த்து கட்சியின் அரசியல் தத்துவார்த்த நிலையிலிருந்து பார்ப்பதற்கும் எப்போதுமே அரசியலுக்கு முக்கியத்துவம் கொடுப்பதற்கும் திருப்பியுள்ளோம்,

## மனிதனின் பாத்திரம்

தனது சொந்த நிலைமைகளின் அடிப்படையில் வெற்றிகரமான தத்துவார்த்த கலாச்சாரப் புரட்சியில் அல்பேனியா ஈடுபட்டுள்ளது. எமது உள்நாட்டு வர்க்கப் போராட்டத்தில் இதுவே பிரதான முனையாகும். அது ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கடுமையான, தொடர்ச்சியான போராட்டமாகும். தத்துவார்த்த கலாச்சாரத் துறைகளில் சோஷலிசப் புரட்சி பூரணமாக வெற்றி பெறுவிடின் அரசியல் பொருளாதாரத் துறைகளில் சோஷலிசப் புரட்சி வெற்றி பெறுவதற்கு எத்தகைய உத்தரவாதமுமில்லையென எமது கட்சியின் ஐந்தாவது மாநாடு சுட்டிக் காட்டியது. எனவே, இறுதி ஆராய்ச்சியில், பூர்ஷுவா திரிபுவாத சிந்தனையைப் பூரணமாக ஒழிப்பதற்குத் தத்துவார்த்த முனையில் நடாத்தப்படும் போராட்டமே முதலாளித்துவம் மீண்டும் புகுத்தப்படுவதைத் தடுத்து சோஷலிசமும் கம்யூனிஸமும் கட்டியெழுப்பப்படுமா வென்பதையும், அல்லது பூர்ஷுவா திரிபுவாதச் சிந்தனை பரப்பப்படுவதற்கு அது பூரணமாகத் திறந்து விடப்பட்டு முதலாளித்துவம் மீண்டும் தலைதூக்குமா என்பதையும் தீர்மானிக்கின்றது.

புரட்சி, நிர்மாணம், போராட்டம், வேலை ஆகியவற்றில் மனிதன் ஒரு தீர்மானமான காரணியாகும். புரட்சிக்கோ அன்றிஎதிர்ப்புரட்சிக்கோ மனிதனையே தயார் செய்தல் வேண்டும். எனவே, மக்களுக்கு அறிவூட்டுவதற்காக எத்தகைய முறையை கடைப்பிடிக்க வேண்டும். மனிதனை வழிநடத்துவதற்கு எத்தகைய தத்துவார்த்தக் கொள்கையை கடைப்பிடிக்க வேண்டும் என்பதே பிரச்சினையாகும். மக்களின் சகல நடவடிக்கைகளையும் வழி காட்டுவதற்கு இதிலிருந்தே முன்னேறிச் செல்ல வேண்டும். திரிபுவாத மென்பது பூர்ஷுவா அரசியல், தத்துவார்த்த, ஒழுக்கச் சீரழிவின் உற்பத்திப் பொருளேயாகும், பூர்ஷுவா, திரிபுவாத எதிர்ப்புப் போராட்டம், சுரண்டும் வர்க்கங்களின் தத்துவார்த்தத்தின் பல திறப்பட்ட வெளிப்பாடுகளுக்கு எதிராக நடத்தப்படும் போராட்டம் தத்துவார்த்தத் துறையில் வர்க்க எதிரியின் எதிர்ப்புக்கெதிரான போராட்டமே. இவ் எதிர்ப்பு அரசியல், இராணுவ எதிர்ப்புக்களிலும் பார்க்க மிகப் பலம் வாய்ந்ததும் ஆழமானதுமாகும். இவ்வெதிர்ப்பை நாம் தோற்கடித்தால்தான் லெனின் கூறியதைப் போன்று ''நாம் அடக்கம் செய்யும் முதலாளித்துவ சமுதாயச் சவப்பெட்டியில் கடைசி ஆணியை அடிப்பதற்கு'' எமக்கு இயலும்.

## தத்துவார்த்த வேலைக்கான கோஷம்

''ஒரு புரட்சிவாதியைப்போன்று சிந்தனைசெய், வேலைசெய், வாழ்'' என்பதே உழைக்கும் மக்களுக்கு அறிவூட்டுவதில் எமது கட்சியின் தத்துவார்த்த வேலைக்கான கோஷமாகும். இளைஞர்கள். தொழிலாள வர்க்கம், கூட்டுறவு விவசாயிகள், மக்களின் புத்திஜீவிகள் ஆகியோர் இம் மாபெரும் புரட்சிகர கோஷத்தை நடைமுறைப்படுத்துவதுடன், பூர்ஷுவா திரிபுவாத தத்துவார்த்த வெளிப்பாடுகள், பின் தங்கிய நிலப்பிரபுத்துவ தத்துவார்த்த வழிப் பழக்கங்கள் சமய மூட நம்பிக்கைகள், அதிகாரத்துவவாதம் மற்றும் நமது சோஷலிஸத் திட்டத்திற்கும் தத்துவார்த்தத்திற்கும் மாறுகவுள்ள யாவற்றின் மீதும் தாக்குதலைத் தொடுத்துள்ளனர். இப் புரட்சிகரப் போராட்டத்தின் தீச்சுடர் சுரண்டும் வர்க்கங்களினாலும் பழைய சுரண்டும் முறையினால் விட்டுச் செல்லப்பட்ட சகல நஞ்சுப் புற்களையும் பொசுக்குகின்றன. இப் புரட்சிகரப் போராட்டம் மக்களின் உலக கண்ணோட்டம், தத்துவார்த்தம் ஆகியவற்றிலுள்ள பிற்போக்கு அம்சங்களை துடைத்தெறிகின்றது. மக்கள், கம்யூனிஸ ஒழுக்க நெறியையும், தத்துவார்த்தத்தையும் வளர்க்கின்றனர். புதிய வழக்கங்களையும் புதிய பழக்கங்களையும் வளர்க்கின்றனர்; அத்துடன் மக்களிடமிருந்து வந்து மக்களுக்கே சேவை செய்யும் புதிய பாட்டாளி வர்க்க கலாச்சாரத்தையும் கலையையும் உண்டாக்கி அபிவிருத்தி செய்கின்றனர்.

## முக்கியத்துவம் வாய்ந்த இயக்கம்

''பெண்கள் உரிமைகளைப் பாதுகாக்கும் கட்சியின் புனித சட்டங்களின் மீறல்களை நசுக்கவும் கண்டிக்கவும் முழுக் கட்சியும் முழு நாடும் ஒன்று திரட்டப்பட வேண்டும்'' என்ற தோழர் அன்வர் ஹோஜாவின் அறைகூவலை ஏற்று ஆண்கள், பெண்கள், இளைஞர், முதியோர், நம் நாட்டு மக்கள் அனைவரும் பெண்களின் பூரண விடுதலைக்கான இயக்கத்தில் ஈடுபட்டுள்ளனர். இவ் வியக்கம் மிக முக்கியம் வாய்ந்ததுடன், நம் நாட்டு நிலைமைகளில் விசேட முக்கியம் வாய்ந்தது. ஏனெனில், எமது கட்சிச் சாஸனம் கூறுமாப் போல், ''உறுதிவாய்ந்த புரட்சிகரச் சக்தியான பெண்களின் விடுதலையில்லாமல் மக்களின் சுதந்திரமும் தனிப்பட்ட சுதந்திரமும் நினைக்கக் கூட முடியாதவை; நம் நாட்டு முன்னேற்றமும் எமது குறிக்கோள்களை அடைவதும் சிந்திக்கக் கூட இயலாதவை.''

நம் நாட்டு உழைக்கும் மக்கள் எமது உற்பத்திச் சக்திகளின் அபிவிருத்தியில் புதிய எழுச்சியை ஏற்படுத்துவதற்கும், சோஷலிஸ உற்பத்தித் தொடர்புகளில் மேலதிக முன்னேற்றங்களை செய்வதற்கும் புரட்சிகரமயமாக்குவதற்கான பல ஆலோசனை முன்வைத்ததுடன், பொருளாதாரத் துறையில் புரட்சிகரமயமாக்கும் பல இயக்கங்களை நடாத்துகின்றனர். எமது கட்சியின் ஐந்தாவது மாநாட்டின் பின்னர், மூன்று மாதத்திற்கும் குறைந்த காலத்தில் சில மலைப் பிரதேசங்களில் கூட்டாண்மையாக்குதல் பூரணப்படுத்தப் பட்டுள்ளது. நம் நாட்டு முழுக் கமத்தொழிலிலும் கூட்டாண்மையாக்குதல் பூரணமாக்கப் பட்டுள்ளது. கூட்டுறவு இயக்கங்களிலுள்ள விவசாயிகள் தனிப்பட்ட நிலத் துண்டுகளின் ஏக்கரும் கால்நடைகளின் தொகையும் குறைக்கப்பட வேண்டுமெனத் தாமாகவே ஆலோசனை கூறியுள்ளனர். முன்னர் இருந்ததிலும் பார்க்க தனிப்பட்ட நிலத் துண்டுகளின் ஏக்கர், 50 வீதத்திலிருந்து 65 வீதம் வரை குறைக்கப் பட்டுள்ளதுடன், கால் நடைகளின் தொகை 50 வீதமாகக் குறைக்கப் பட்டுள்ளது. அரசாங்கப் பண்ணைத் தொழிலாளர்கள் தமது ஆலோசனைகளுக்கிணங்க, தமது விருப்பப்படியே தமது தனிப்பட்ட நிலத் துண்டுகளை கையளித்துள்ளனர். பூர்ஷுவா திரிபுவாத தத்துவார்த்தத்தை உறுதியாக அவர்கள் எதிர்க்க வேண்டுமென்றும், பணத்தை தேடுவதற்கு வழிவகுக்கும் குறுகிய தனிப்பட்ட நலன்கள், தனிப்பட்ட இன்பந் தேடுதல், தனிப்பட்ட சௌகரியங்கள் ஆகியவற்றையும் பொருளாதாரத் தூண்டுதலையும் மற்றெல்லாவற்றிற்கும் மேலாக முன் வைத்தல் போன்றவற்றிற் கெதிராக உறுதியாகப் போராடுமாறு நம் நாட்டு உழைக்கும் மக்களுக்கு கட்சி கற்பித்துள்ளது. நம் நாட்டு உழைக்கும் மக்கள் தாமாகவே மேலதிக சம்பளத்தையும் அடிப்படைச் சம்பளத்தைத் தவிர்த்த ஏனைய வருமானங்களையும் கைவிட்டதுடன் உற்சாகத்தையே முதல் இடத்தில் வைத்து மக்கள், தந்தையர் நாடு, சோஷலிஸம் ஆகியவற்றின் உன்னத நலன்களையே மற்றெல்லாவற்றையும் விட எப்போதும் முன் வைக்கின்றனர். அரசின் மேல் தமது நேசத்தை அவர்கள் திருப்பியுள்ளனர். இவையாவும் அவர்களது உன்னத தேசாபிமானத்தினதும், புரட்சிகர உணர்ச்சியினதும் வெளிப்பாடாகும்.

## மற்றொரு முக்கியத்துவம் வாய்ந்த கோஷம்

''மலைப் பிரதேசத்தை வெட்டித் திறந்து அவற்றை நெற்களஞ்சியமாக மாற்றுங்கள்'' என்ற கட்சியின் கோஷத்தை-வியத்தகு பொருளாதார அரசியல் இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த கோஷத்தை, செயற்படுத்துவதற்காக கிராமப் புறங்களுக்கு ஆதரவான பிரமாண்டமான சக்தி மிக்க இயக்கம் நம் நாட்டில் ஏற்பட்டுள்ளது. நம் நாட்டு இளைஞர்கள் தன்னிச்சையான உழைப்பில் பங்கெடுத்துக் கொள்வதுடன், மலைப் பிரதேசங்களில் புகையிரதப் பாதையும் தெருவும் அமைப்பதுடன் உள்ளூர் திட்டங்களில் ஈடுபட்டுள்ளனர். ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக்கணக்கான இளம் ஆண்களும் பெண்களும் தன்னிச்சையான உழைப்பில் இப் பிரதேசங்களில் பங்கெடுத்துக்கொள்வதுடன் உழைப்புப் பல்கலைக் கழகத்தில் கல்வி பெற்று சோஷலிஸத்திற்காக அத்திவாரமிட்ட தமது புரட்சிகர முன்னோர்களின் சிறந்த வழித்தோன்றல்களாகத் தம்மைத் தயார் செய்து கொள்கின்றனர்.

புரட்சிகர நோக்கம்—சோஷலிஸ நோக்கம்—வெகுஜனங்களின் நோக்கமாகும். வெகுஜனங்களின் மேல் உறுதியான நம்பிக்கை வைத்து, அவர்களின் முயற்சியை அபிவிருத்தி செய்து, வெகு ஜனங்களைக் கௌரவித்து, அவர்களின் ஆசிரியர்களாகச் சேவை செய்ய முன்னர் அவர்களின் மாணவர்களாகவிருந்து எப்போதுமே எமது வெகுஜன கொள்கையைப் பின் பற்றியுள்ளது. எனவே எமது கட்சிவெகுஜனங்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளதுடன் தோற்கடிக்க முடியாதவாறு உள்ளது. இப்போது. இவ் வெகுஜனக் கொள்கை புதிய அபிவிருத்தியைப் பெற்றுள்ளதுடன் நாளுக்கு நாள் ஆழமாக அபிவிருத்தியடைகின்றது.

## மிக முக்கியமான வாழ்க்கை

இன்று, முன்னென்றுமில்லாத அளவுக்கு மக்களின் உற்சாகம் உயர்ந்துள்ளது. பல முக்கிய புரட்சிகர இயக்கங்களில்-அரசியல், தத்துவார்த்தம், கலாச்சார, பொருளாதாரம், விஞ்ஞானம் — சேர்ந்துள்ளனர். இவ்வியக்கங்களில் அவர்கள் ஈடுபடுவதன் மூலம் அகநிலையான உலகை வெகுஜனங்கள் மாற்றி அமைப்பதோடல்லாமல் தாமே புது உருப் பெறுகின்றனர். இவ்வியக்கம் அவர்களின் சிந்தனையை அவர்களின் உலகக் கண்ணோட்டதை, அவர்கள் வாழ்வு, அவர்கள் உழைப்பு ஆகியவற்றை புரட்சிகர மயமாக்க உதவுகின்றது. இதுவே இப்போது எமது நாட்டில் மிக முக்கியமான வாழ்க்கையாகும்.

வெகுஜனங்கள் தமது புரட்சிகர உழைப்பு உற்சாகத்தை செயற்படுத்துவதினாலும், சுய-நம்பிக்கையில் தொடர்ந்தும் இருப்பதினாலும் தேசிய பொருளாதார திட்டங்களைச் செயற்படுத்துவதில் பரந்த நேரடிப் பாகத்தை வகிப்பதினாலும் சகல துறைகளிலும் இவை வெற்றிகரமாகச் செயற்படுத்தப் படுகின்றன. நாலாவது, ஐந்தாவது ஆண்டுத் திட்டத்தின் முதலிரண்டு ஆண்டுகளின் பலன்கள் இதை மிகவும் தெளிவாக விளக்குகின்றன. இவ்விரண்டு ஆண்டுகளுக்கும் ஏற்படுத்தப்பட்ட திட்டமிடப்பட்ட இலக்குகள் நிறைவேற்றப் பட்டதோடல்லாமல் பல பகுதிகளில் கூடுதலாகவும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

## மகத்தான உண்மை

''அரசியல் அதிகாரம் துப்பாக்கிக் குழாயிலிருந்து தான் பிறக்கிறது'' என தோழர் மாசே-துங் கூறுகிறார். இது ஒரு

9-ம் பக்கம் பார்க்க

# எதிர் காலம் புது உலகுக்கே சொந்தம்

8—-ம் பக்கத் தொடர்

மகத்தான உண்மையாகும். எமது நாட்டில் சுதந்திரமும், மக்களுடைய அரசியல் அதிகாரமும் கூட துப்பாக்கிக் குழாயிலிருந்துதான் பிறந்தது. அதே போல, சுதந்திரத்தையும் மக்களுடைய அரசியல் அதிகாரத்தையும் பிறர் அபகரியாமல் பாதுகாப்பதும் துப்பாக்கிக் குழாய் தான். ஆகவே தான் எமது தேசிய பாதுகாப்புச் சக்தியைப் பலப்படுத்துவதில்—மக்கள் படையைத் தொடர்ச்சியாகப் பலப்படுத்துவதில்—முழுத் தேசத்தையும் போர் வீரர்கள் ஆக்கும் வேலையில்—எமது கட்சி எப்பொழுதும் பெரும் அக்கறை எடுத்து வந்துள்ளது. இந்தவகையில், சமீப காலங்களில் தொடர்ச்சியான பலமுக்கிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. சகல படைப் பிரிவுகளிலும், இராணுவத் தலங்களிலும் கட்சிக் குழுக்கள் அமைத்த படை வீரர் இடையே அரசியல் ஊழியர் முறையைத் திரும்பவும் கொண்டு வருதல், ஆயுதப் படைகளில் கட்சியின் தலைமையை பலப்படுத்துவதற்காக இராணுவ விவகாரங்களுக்கும் அரசியலுக்கும் இடையே சரியான தொடர்பை உருவாக்குதல், மக்களைப் பொறுத்தவரை அரசியல் வேலைக்கு அதிக முக்கியத்துவம் அளித்தல், ஒரு யுத்தத்தின் முடிவைத் தீர்மானிப்பவர்கள் மக்களே, மக்கள் முதன்மையான காரணியாகவும் ஆயுதங்கள் இரண்டாம் பட்சமானவையாகவும் இருக்கின்றன; ஆயுதப் படைகளின் வல்லமைக்கும் உறுதிக்கும் மூலதாரமான அவைகளின் உள் ஐக்கியத்தை உறுதிப்படுத்தும் நோக்கமாக, இராணுவ அதிகாரிகளிடையே வரக் கூடிய கெட்ட முறைகளை அழித்தல், அதிகாரிகளுக்கும் வீரர்களுக்கும் இடையே மேலும் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்துவதற்காக இராணுவ அதிகாரப் பட்டங்களை ஒழித்தல், சுய ஆதாரம் என்ற உணர்வில் குறுகியகால எல்லைக்குள்ளே உணர்வில் சுய தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் துப்பாக்கியை ஏந்தும் போதே பிக்காஸையும் ஏந்த வேண்டும் என்ற கடமையை ஆயுதப்படைகள் மத்தியிலே உருவாக்குதல், சகல மக்களுக்கும் இராணுவப் பயிற்சியளிப்பதை வலுப்படுத்துதல் என்பவை இத்தொடர்ச்சியான நடவடிக்கைகளில் அடங்கும்.

## எதிரிக்கு எச்சரிக்கை

அல்பேனியா ஒரு சமாதானம் விரும்பும் சோஷலிஸ நாடாகும். அது யாரையும் பயங்காட்டியதும் இல்லை; காட்டுகிறதும் இல்லை: காட்டப் போவதும் இல்லை. நாம் எமது அயல் நாடுகளுடனும், ஏனைய நாடுகளுடனும் இயற்கையான உறவுகளையே வற்புறுத்தி வந்துள்ளோம். ஆனால் எதிரியின் ஆபத்தையும் மோசமடையும் சர்வதேச உறவுகளையும் பார்த்துக் கொண்டு கண்மூடி இருக்க எம்மால் முடியாது; கை கால்களைக் கட்டிக்கொண்டு இருக்க எம்மால் முடியாது. எத்திசையிலிருந்தும் வரக்கூடிய எந்தத் தாக்குதலுக்கும், எந்த ஆக்கிரமிப்புக்கும் எத்தனை ஆக்கிரமிப்பாளருடைய கூட்டு நடவடிக்கைக்கும் சகல வழிகளிலும் பதிலளிக்க நாம் தயாராய் உள்ளோம்.

இவ் வருடம் செப்டம்பர் மாதத்தில் நடைபெற்ற அல்பேனிய ஜனநாயக முன்னணியின் நாலாவது காங்கிரஸில், தோழர் அன்வர் ஹோஜா எமது நாட்டுக்கெதிராக ஆக்கிரமிப்புத் திட்டங்கள் உருவாக்குவோரைக் கடுமையாக எச்சரித்துள்ளார். அவர் சொன்னார்: ''கால்களுக்கிடையில் வால் அடிபட ஓடு. உள்ளே வரத் துணிந்தால் உன்னைக் கடுமையாகத் தண்டிப்போம். எமது எல்லைகளை அபகரிக்கத் துணிந்தாயானல் உன்னை நாறும் பிணமாக மாற்றுவோம். நீ ஆயுதங்களிலும் மனித பலத்திலும் மிஞ்சியவன் என்று எண்ணி, சோஷலிஸ அல்பேனியாவை ஒரே மூச்சில் விழுங்கி விடலாம் என்றால், தயவு செய்து அதைச் செய்ய முயன்று பார். நீ போரை எமது எல்லைக்கு விஸ்தரிக்க முயன்றால், நீ மூட்டுகின்ற தீ, மாபெரும் சுவாலையாக வளரும், அதன் விளைவு பன்மடங்காகும் என்பதை எச்சரிக்கிறோம். எமது எல்லைகளை அபகரிக்க முயன்றால் சோஷலிஸ அல்பேனியாவைப் பாதுகாக்கவரும் உதவி, அரசாங்க எல்லைகளைக் கடந்தது என்பதை நீ அறிந்து கொள்வாய்.

## புரட்சியின்முன்னேற்றத்தை எதனாலும் தடுக்க முடியாது

அன்புள்ள தோழர்களே!

இரண்டு உலகங்களுக்கிடையே நடைபெறும் வாழ்வுக்கும் தாழ்வுக்கும் ஆன போராட்ட—பயங்கர போராட்ட-வரலாற்றுக் காலகட்டத்தில் நாம் வாழ்கிறோம். ஒன்று பழைய உலகம், ஏகாதிபத்தியத்தினதும் முதலாளித்துவத்தினதும் உலகம்; தவிர்க்க முடியாதபடி அழிவை நோக்கிச் செல்லும் உலகம். மற்றது புதிய உலகம்; சோஷலிசத்தினதும் கம்யூனிஸத்தினதும் உலகம்; சகல நாடுகளிலும் உள்ள விடுதலை செய்யப்பட்ட மக்களின் உலகம். எதிர்காலம் இப்புதிய உலகத்துக்கே சொந்தமானது. இந்த மாபெரும் யுத்தத்தில் புரட்சிகர சக்திகள் எதிர்ப்புரட்சிச் சக்திகளை விட மேலோங்கி நிற்கின்றன. வெற்றிக்கான வாய்ப்பு தெளிவாக வளர்ந்து வருகிறது. இது வரலாற்றின் எதிர்க்க முடியாத ஒரு நியதி. உலகப் புரட்சியின் முன்னேற்றத்தை எதனாலும் தடுத்து நிறுத்த முடியாது; பழைய உலகத்தின் அழிவை எதனாலும் தடுக்க முடியாது. சமுதாயத்தின் வளர்ச்சி பற்றிய இந்தப் புறநிலை விதிக்கு முன்னே, ஏகாதிபத்தியவாதிகளின் அணு ஆயுதங்களோ, திரிபுவாதிகளின் துரோகமோ, அல்லது ஏகாதிபத்தியத்துக்கும் திரிபுவாதத்துக்கும் இடையிலான ஒத்துழைப்போ எவ்வித விளைவையும் ஏற்படுத்த முடியாது.

ஏகாதிபத்திய முதலாளித்துவ உலகின் தலைவன் அமெரிக்க ஏகாதிபத்தியம்; இதன் தீவிர சகபாடிகள் சோவியத் திரிபுவாதத் தலைவர்கள். சோஷலிசத்தைத் துடைத்தெறிவதற்காக, வெவ்வேறு நாடுகளில் நடைபெறும் தேசிய விடுதலைப் போராட்டங்களை அடக்குவதற்காக,

உலகம் முழுவதிலும் ஆதிக்கம் செய்ய இரு வல்லரசுகளும் ஒன்றுடன் ஒன்று ஒத்துழைக்கின்றன. எனினும், சகல நாடுகளிலும் அவர்களுடைய அழிவும், மக்களால் அவர்கள் புதைக்கப்படுதலும் தவிர்க்க முடியாதது. ''அமெரிக்க தனியுரிமை முதலாளித்துவவாதிகள் தமது ஆக்கிரமிப்பு, யுத்தக் கொள்கைகளை முன்தள்ள முனைந்தால், உலக மக்களால் அவர்கள் தூக்கில் இடப்படும் நாள் வர இருக்கிறது. அமெரிக்காவின் சகபாடிகளுக்கும் இதே விதி காத்திருக்கிறது.'' என்று தோழர் மாஓ சே-துங் கூறியுள்ளார்.

## உத்வேக மளிக்கும் வியட்நாம்

இன்று, ஒரு சர்வதேச ஆக்கிரமிப்பாளன் என்ற வகையில் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு எதிரான பல்வேறு நாட்டு மக்களின் போராட்டங்களின் மையம் வியட்நாம் போராகும். மக்கள் யுத்தத்தின் மகத்துவத்தையும், சகல நாடுகளிலும் உள்ள மக்களின் தகர்க்க முடியாத சக்தியையும் வெளிப்படுத்திக் காட்டும் உன்னத உதாரணமாக, உலகின் வல்லமை பொருந்திய காட்டுமிராண்டித்தனமான ஏகாதிபத்தியமான அமெரிக்காவின் பலவீனத்தை அம்பலப்படுத்தும் உதாரணமாக வீரமிகு வியட்நாம் விளங்குகிறது. உலக நாடுகள் முழுவதிலும் உள்ள மக்களுக்கு மகத்தான உத்வேகம் அளிக்கும் மூலாதாரமாக வீரமிகு வியட்நாம் விளங்குகிறது.

அது, எவ்வாறு ஏகாதிபத்தியத்தை, அதன் அடக்குமுறையை, ஆக்கிரமிப்பை எதிர்ப்பது, அழித்தொழிப்பது என்பதை உலக மக்களுக்குப் புகட்டியுள்ளது. தெற்கை விடுதலை செய்வதற்காக, வடக்கைப் பாதுகாப்பதற்காக, தாய்நாட்டை ஒற்றுமைப்படுத்துவதற்காக வியட்நாமிய மக்கள் நடத்தும் நியாயமான போராட்டத்தை எவ்விதத் தயக்கமும் இன்றி, அல்பேனியக் கட்சியும், அரசாங்கமும், மக்களும் ஆதரித்தார்கள்; ஆதரிக்கிறார்கள்; ஆதரிப்பார்கள். அமெரிக்க ஆக்கிரமிப்பாளருக்கும் அவர்களுடைய வால்பிடிகளுக்கும் எதிரான ஆயுதம் தாங்கிய போராட்டத்தை, விட்டுக் கொடுத்தலின்றி, தொடர்ச்சியான முடிவுவரை நடத்துவது தான் வியட்நாம் பிரச்சினை தீர்வதற்குள்ள சரியான ஒரே ஒரு வழி என்பதை அவர்கள் ஆதரித்தார்கள், ஆதரிக்கிறார்கள். ''குண்டுவீச்சு மூலம் சமாதானம்'' என்ற அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் கேடுகெட்ட சதியையும், ''குண்டு வீச்சை நிறுத்துவது மூலம் சமாதானப் பேச்சுக்குத் தூண்டுதல்'' என்ற குருஷ்சோவ் திரிபுவாதிகளின் ஏமாற்று மோசடிகளையும் துரோகத்தையும் அவர்கள் கண்டித்துள்ளார்கள்; கண்டிக்கிறார்கள். வியட்நாமிய மக்கள் போராட்டத்தின் தலைவிதியை, சமாதான மேசையில் அல்ல போர்க்களத்திலேயே நிர்ணயித்துக்கொள்ள முடியும். துப்பாக்கியே இறுதிப் பேச்சாளன், ஏனெனில் சுதந்திரம் துப்பாக்கிக் குழாயில் இருந்து பிறக்கிறதேயன்றி, எதிரிகளுடன் நடத்தும் சமாதானப் பேச்சு வார்த்தைகளிலும் மாநாட்டு மேசைகளில் இருந்தும் அல்ல.

## மத்திய கிழக்கில்

மத்திய கிழக்கின் மக்களுக்கும், ஐக்கிய அரபுக் குடியரசு, சிரியா, ஜோர்டான் போன்ற அரபு நாடுகளுக்கும் எதிராகவும்சமீபத்தில்,அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கைக்கருவியாகிய இஸ்ரேல் ஆத்திரமூட்டும் ஆயுதப் போராட்டத்தில் இறங்கி உள்ளது. எங்கெல்லாம் கொள்ளையும் ஆக்கிரமிப்பு யுத்தங்களும் நடைபெறுகின்றனவோ, அங்கெல்லாம் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் இரத்தம் தோய்ந்த பேய்த்தனமான கரங்கள் உள்ளன என்பதை திரும்பவும் ஒரு முறை மத்திய கிழக்கு யுத்தம் நிரூபித்துள்ளது. ஏனைய நாட்டு மக்களை நசுக்குவதற்காக, அவர்களுடைய செல்வத்தைக் கொள்ளையடிப்பதற்காக, கொழுந்துவிட்டெரியும் புரட்சிச் சுவாலையை அணைப்பதற்காக, கணக்கிட முடியாத பயங்கர படுபாதகக் குற்றங்களைச் செய்யும் அளவுக்கு அமெரிக்க ஏகாதிபத்தியம் சென்றுள்ளது.

மத்திய கிழக்கு நெருக்கடி, திரிபுவாதிகளின் உண்மையான சொரூபத்தை வெளிக்காட்டியுள்ளது. சோவியத் தலைவர்களால் தலைமை தாங்கப்படும் குருஷ்சோவ்—டிட்டோ திரிபுவாதக் கோழைகள், அடிபணியும் வாதிகள், துரோக உருமாறிகள், உலக மக்களின் தவறான நண்பர்கள் என்றும், ஏகாதிபத்தியவாதிகளுக்கே உண்மையான நண்பர்கள் என்றும் அம்பலப்படுத்தப்பட்டுள்ளனர். திரிபுவாதத்தில் தங்கியிருத்தல் உளுத்துப் போன பலகையில் சாய்ந்திருத்தல் போலாகும் என்பதற்கும், அவர்களில் நம்பிக்கை வைத்தல் யூதாஸில் (காட்டிக் கொடுப்பவர்களில் மொர்.) நம்பிக்கை வைத்தலுக்குச் சமமாகும் என்பதற்கும் புதிய ஆதாரங்களை இது தந்துள்ளது.

## அராபிய மக்களும் அல்பேனிய மக்களும்

அராபிய மக்கள் ஒரு பின்னடைவை அடைந்துள்ளனர். ஆனால் அவர்கள் தோற்கடிக்கப் படவில்லை. அவர்கள் ஒரு போரில் தோற்றனர். ஆனால் முழுப் போராட்டத்தையும் இழந்துவிடவில்லை. ஆக்கிரமிப்பாளனை எதிர்க்கவும் தோற்கடிக்கவும் அராபிய மக்களுக்குச் சக்தி யுண்டென்பதில் எமக்கு நம்பிக்கை இருக்கிறது.

தமது ஏமாற்றத்தில் இருந்து அவர்கள் தகுந்த பாடங்களைப் படித்து, தமது ஒற்றுமையை உறுதியான அடிப்படையில் பலப்படுத்துவார்கள் என்றும், உண்மை நண்பர்களுக்கும் போலி நண்பர்களுக்கும் இடையே வேறுபாடு ஏற்படுத்துவதில் சாதுரியமாய் இருப்பார்கள் என்றும், ஏகாதிபத்தியம் பற்றி மயக்கம் கொள்ள மாட்டார்கள் என்றும், திரிபுவாதிகளில் நம்பிக்கை வைக்க மாட்டார்கள் என்றும் நாம் நம்புகிறோம். அராபிய மக்கள் தமது நீதியான போராட்டத்தில் தனித்து நிற்கவில்லை. முழு உலகத்தின் புரட்சிகர மக்களதும் ஆதரவு அவர்கள் பக்கம் இருக்கிறது. அல்பேனிய மக்கள் அவர்கள் பக்கம் நின்றார்கள், இனியும் நிற்பார்கள். சகோதர அராபிய மக்களும், அல்பேனிய மக்களும் நெருங்கிய நட்புறவால் பிணைக்கப் பட்டுள்ளனர்.

## மக்கள் சீனவுக் கெதிராகச் சதி

அமெரிக்க ஏகாதிபத்தியம் தனது உலக கேந்திர ஸ்தானத்தை தூர கிழக்குக்கு மாற்றியுள்ளது. இக் கேந்திரம், முக்கியமாக மக்கள் சீனவுக்கு எதிராக குறி வைக்கப்பட்டுள்ளது. ஆசியாவில் உள்ள சகல பிற்போக்கு வாதிகளும், சோவியத் தலைவர்களால் தலைமை தாங்கப்படும் நவீன திரிபுவாதிகளும் இயங்கத்

10-ப் பக்கம் பார்க்க

# சோவியத் திரிபுவாதிகள்

# மக்களினதும் சோஷலிஸத்தினதும் எதிரிகள்

—9-ம்பக்கத் தொடர்

தொடங்கியுள்ளனர். புரட்சியினதும் சோஷலிஸத்தினதும் வலுவுள்ள தளமான மக்கள் சீனாவைக் 'அடக்கவும்' தாழ்மைப் படுத்தவும், சகல எதிர் புரட்சிவாதிகளும் ஒரு ''புனித கூட்'' டில் சேர்ந்து சதி செய்கின்றனர். உலகப் பிற்போக்கு வாதிகளின் சீன விரோத சதி, தோல்வியடைந்து விட்டது. சீனாவைக் காலால் மிதித்து, கொள்ளை யடித்து, அதன் நிலத்தை அபகரித்த காலம் மலையேறி விட்டது. சீனா இன்று அதன் சொந்த எஜமானன் ஆகும். அது ஒரு. மகத்தான சோஷலிஸ நாடு. மார்க்ஸிஸ—லெனினிஸ மா சே-துங் சிந்தனையை ஆயுதமாகக் கொண்டு, கம்யூனிஸ்ட் கட்சியால் வழி நடத்தப்பட்டு அது தனது 70 கோடி மக்களை ஆக்கிரமிப்பி லிருந்து பாதுகாக்கிறது. சீன மக்களின் எதிரிகள் சீனாவில் தாங்கள் கருதும் ''குழப்ப நிலை'' நிலவுவதாகவும் அதைத் தமது நோக்கத்துக்காகப் பாவிக்கலாம் என்றும் எண்ணுகிறார்கள். அவர்கள் தப்புக் கணக்குப் போட்டுள்ளார்கள். சீனாவில் நிலவும் சூழ்நிலை மிக உன்னதமானது. இன்று போல் என்றும் அது சிறப்பாக இருந்ததில்லை. மகத்தான பாட்டாளி வர்க்க கலாச்சாரப் புரட்சி திரிபுவாதத் துரோகிகளை அப்புறப் படுத்தியுள்ளது; சீனாவின் குருஷ்சோவையும் அவருண்டைய கூட்டத்தையும் தோற்கடித்துள்ளது. தமது புரட்சியின் வெற்றியையும் சோஷலிஸத் தாய் நாட்டையும் பாதுகாக்கும் நிலையிலுள்ள சீன மக்களின் புரட்சிகர உணர்வையும், உறுதியையும் முன்னொரு போதும் இல்லாத அளவுக்கு உயர்த்தியுள்ளது. சீனாவுக்கு எதிராக யுத்தம் ஆரம்பிக்கப் பட்டால், இச் சீன விரோதப் போர் எல்லை கடந்த மாபெரும் உலகப் போராக மாறி, ஏகாதிபத்திய வாதிகளையும், சகல பிற்போக்கு வாதிகளையும், திரிபுவாதிகளையும், அவர்களுடைய வால் பிடிகளையும், பாதந்தாங்கிகளையும் ஒரே புதை குழியில் புதைத்துவிடும். சீனாவுக்கு எதிராக யார் வந்தாலும், தனது அழிவையே அவர் நிச்சயம் தேடிக் கொள்வார்.

### அமெரிக்க-சோவியத் ஒத்துழைப்பு

உலகத்தை அதிகாரம் செலுத்தும் தமது முயற்சியில் இரு வல்லரசுகளாகிய அமெரிக்க ஏகாதியத்திவ வாதிகளும் சோவியத் திரிபுவாதத் துரோகிகளும் ஒருவருடன் ஒருவர் அதிகமதிகமாக ஒத்துழைக்கின்றனர், கொலைகாரன் ஜோன்சனுக்கும் துரோகி கொஸிஜினுக்கும் இடையில் நடந்த கிளாஸ்பரோ பேச்சு வார்த்தை இந்தக் கூட்டுழைப்பின் அபாயகரமான புதிய கட்டத்தைக் காட்டுகிறது. இது மக்களின் முதுகுக்குப்பின்னால் ஏகாதிபத்திவவாதிகளும் திரிபுவாதிகளும் செய்துள்ள இன்னொரு சதியாகும். இது மக்களின் முக்கியநலன்களுக்கு மாறானது. சோவியத்—அமெரிக்கக் கூட்டுழைப்பு சகல நாட்டு மக்களுக்கும் ஆபத்தானது என்பதை நடைமுறை உண்மைகள் மேலும் நிரூபிக்கின்றன. ஆகவே வரலாறு முன்னெப்போதும் கண்டிராத இந்தஎதிர்ப் புரட்சி கூட்டுழைப்பை அம்பலப்படுத்திமுறியடிக்க வேண்டியது உலக முழுவதிலும் உள்ள சகல புரட்சிகர மக்களினதும் அத்தியாவசிய கடமையாகும். ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் அதே நேரத்தில் அதன் சகபாடியான சோவியத் தலைமைக் கும்பலால் தலைமை தாங்கப் படும் திரிபுவாதத்தையும் எதிர்க்காமல் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம் வெற்றி பெறாது என்பதை இன்றைய நிலையில் மக்கள் மேலும் மேலும் தெளிவாக உணர்ந்து வருகிறார்கள். சோவியத் திரிபுவாதிகளுடன் ஐக்கியம் என்ற பிரச்சினைக்கே இடம் இல்லை. அவர்கள் மக்களதும் சோஷலிஸத்தினதும் எதிரிகள்; புரட்சி சுவாலையை அணைக்கும் தீயணைக்கும் படைகள்; மார்க்ஸிஸ—லெனினிஸத்தின் துரோகிகள், திரிபுவாதிகளுடன் ஐக்கியம் பற்றி யார் பேச விரும்புகிறார்களோ, அவர்கள் திரிபுவாதிகளின் நிலைக்குத் தாழ்ந்துள்ளார்கள் என்பதையும், மார்க்ஸிஸ—லெனினிஸத்தில் இருந்து சீரழிந்த திரிபுவாதக் கருத்துக்களுடன் இணைந்து கொண்டார்கள் என்பதையும், சோவியத்—அமெரிக்கக் கூட்டுழைப்பில் அக்கறை கொண்டுள்ளார்கள் என்பதையுமே காட்டும். கம்யூனிஸ இயக்கத்துள், ''நடுவழி'' ''மூன்றாவதுவழி'' ''விசேஷ வழி'' என்பதாக ஒன்று இல்லை, இருக்கவும் முடியாது, மார்க்ஸிஸ—லெனினிஸத்துக்கும் திரிபுவாதத்துக்கும் இடையே எந்த வித ''இணைப்பையும்'' கட்ட முடியாது. சகல ''இணைப்புகளும்'' வெட்டப்பட்டுள்ளன, ஒவ்வொரு நிகழ்ச்சியும் மார்க்ஸிஸ வாதிகளை திரிபுவாதிகலிருந்து பிரித்து வைக்கிறது. மார்க்ஸிஸ வாதிகளையும் திரிபுவாதிகளையும் ஐக்கியப்படுத்த எதனாலும் முடியாது.

### லெனினையும்,ஸ்டாலினையும் நினைவு கூர்வர்

திரிபுவாதிகள் ஆட்சியில் உள்ள சோவியத் யூனியனிலும் ஏனைய திரிபுவாத நாடுகளிலும் உள்ள புரட்சிகர கம்யூனிஸ்டுகளும் மக்களும் பேச வேண்டிய சந்தர்ப்பம் வந்து விட்டது. இந்த வருடம் உலகம் முழுவதிலும் உள்ள புரட்சிவாதிகள் மாபெரும் அக்டோபர் புரட்சியின் 50-வது வருட நிறைவைக் கொண்டாடுவார்கள்; மகத்தான சோவியத் மக்களின் மறைந்துபோன பொல்ஷெவிக்குகளின், சிறப்பாக லெனினதும் ஸ்டாலினினதும், நினைவைகூர்வார்கள் லெனினினதும்ஸ்டாலினினதும் பாதையைப் பின்பற்றும்படி—சிகப்பு அக்டோபரின், உள்நாட்டு யுத்த வீர நாட்களின், மகத்தான தேச பக்க போராட்டத்தின் சிறப்பு மிக்க புரட்சிகர பாராம்பரியங்களைப் பின்பற்றிப் போராடும்படி, அக்டோபர் புரட்சியைஅழிக்கின்ற,லெனினினதும் ஸ்டாலினினதும் பாதைக்கு மாறாக, மக்களின் முதுகில் சவாரி செய்கின்ற துரோகிகளைத் தூக்கியெறியும்படி அவர்கள் மக்களுக்கு அறைகூவல் விடுவார்கள். சோஷலிஸத்தினதும் புரட்சியினதும் அடித்தளமாக விளங்கிய சோவியத் யூனியனை ஓர் ஏகாதிபத்திய, குறுகிய தேசியவாத நாடாக இத் துரோகக் கும்பல் மாற்றி, அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளிடம் கூட்டு சேர்ந்துள்ளது.

### மாபெரும் நட்பு

அன்புள்ள தோழர்களே;

எமது இருகட்சிகளும், எமது இரு நாட்டு மக்களும், எமது இரு நாடுகளும் ஓர் அழிக்க முடியாத, உண்மையான மாபெரும் நட்பினால், புரட்சிகர நட்பினால் பிணைக்கப் பட்டுள்ளன. ஏகாதிபத்தியத்திற்கும் திரிபுவாதத்திற்கும் எதிரான பொதுப் போராட்டத்தில்—புரட்சிக்கும், சோஷலிஸத்தின் வெற்றிக்குமான பொது இலக்கை அடையும் போராட்டத்தில் இந்த நட்பு பலப் படுத்தப்பட்டுள்ளது. இந்த நட்பு, எமது இரு கட்சிகளாலும் எமது மாபெருந் தலைவர்களான தோழர் மாஓவினாலும் தோழர் அன்வர் ஹோஜாவினாலும் உருவாக்கப்பட்டது:

சர்வதேசப் பாட்டாளி வர்க்க உணர்ச்சியிலும், மார்க்சிஸ-லெனினிஸ அடிப்படையிலும் அமைந்த கம்யூனிஸ்ட் கட்சிகளின், சோஷலிஸ நாடுகளின் உறவுக்கு அல்பேனியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் நிலவும் நட்புறவு உன்னத எடுத்துக் காட்டாகும். இந்த நட்புறவின் இயல்பும் முக்கியத்துவமும், தலைவர் மா சே-துங் எமது கட்சியின் 5வது காங்கிரஸுக்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் அடங்கியுள்ளது. எமது கட்சியின் அங்கத்தவர்களும், சலக மக்களும் தோழர் மாஓ வின் வாழ்த்துச் செய்தியை மிதமிஞ்சிய ஆர்வத்துடன் வரவேற்றார்கள். எமது கட்சிக்கும், மக்களுக்கும் தலைவர் மா சே-துங் அளித்த உயர் மதிப்புக்கு நாம் நன்றி செலுத்துகிறோம். சீனாவைத் தாக்குபவர்களும் பொய்ப் பிரசாரம் செய்பவர்களும் தமது செயலின் கசப்பான விளைவுகளைத் தாமே அனுபவிக்க வேண்டி வரும்; மிகக் கண் மூடித்தனமாக சீனாவை தாக்குபவர்களும் பொய்ப் பிரசாரம் செய்பவர்களும் மிக மோசமான தோல்வியை அடைய வேண்டி வரும்.

### சோஷலிஸத்திற்காக முன்னேறுவார்கள்

அல்பேனிய மக்களும், தொழிற் கட்சியும் ஒருவரே போல் உறுதியாக ஒற்றுமைப் பட்டு, மா சே-துங்கின் மகத்தான கம்யூனிஸ்ட் கட்சியோடும் எழுபதுகோடி வீரோதார சீன மக்களோடும் நட்புறவை உறுதியாக்கி, தோளோடு தோள் பூண்டு முன்னே நடப்பார்கள். இப் பயணம் இலகுவானதோ கடினமானதோ, சூரிய வெளிச்சத்தின் கீழோ கடும் மழையின் கீழோ, நல்ல கால நிலையிலோ அல்லது புயலிலோ எதன் கீழும், எமது இரு கட்சிகளும், எம் இரு நாடுகளும், எமது இரு நாட்டு மக்களும், எக்காலத்தும் மிக ஒன்றாக நெருங்கி இணைந்து மார்க்சிஸ-லெனினிஸப் பதாகையை உயர்த்திப் பிடித்து, ஏகாதிபத்தியத்தையும் திரிபுவாதத்தையும் எதிர்த்து, புரட்சியின் வழியில் சோஷலிஸத்துக்காக, பெரும் சாரிசாரியாக முன்னேறுவார்கள்.

சீனாவுக்கும் அல்பேனியாவுக்கும் இடையிலான புரட்சிகர உறுதிப்பாடு என்றும் நிலைத்து மேலும்மேலும் வளரட்டும்!

மாபெரும் சீன மக்களும் மாண்புமிக்க சீன கம்யூனிஸ்ட் கட்சியும் நீடூழி வாழ்க!

சீனாவின் மகத்தான பாட்டாளி வர்க்க கலாச்சாரப் புரட்சி நீடூழி வாழ்க!

ட்ஸான் நகரத்து, ஸான்டுவ் மாகாணத்து புரட்சிகரப் பாட்டாளிரள் நீடூழி வாழ்க!

சீன மக்களினதும் கட்சியினதும் மாபெரும் தலைவரும் மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகியோரின் வாரிசும், எமது கட்சியாலும் மக்களாலும் மிக உயர்வாக மதிக்கப்படும் நண்பரும் ஆகிய தலைவர் மா சே-துங் அவர்கள் நீடூழி வாழ்க!

பல்லாண்டுபல்லாண்டு வாழ்க

—7-ம் பக்கத் தொடர்

## சோஷலிஸப் . . .

தாக—நாட்டை விடுவிக்கும் சக்திபெற்றதாக— ஏகாதிபத்தியவாதிகளினதும் பிற போக்கு சக்திகளினதும் ஆக்கிரமிப்பு முயற்சிகளிலிருந்து நாட்டைக் காப்பாற்றும் திறமையுள்ளதாக உள்ள சேனை அமைக்கப்படுவது இன்றியமையாதது என்பதை எமது தேசிய விடுதலை யுத்தத்தினதும், விடுதலைக்குப் பின் நாட்டின் அபிவிருத்தியினதும் அனுபவம் எடுத்துக் காட்டுகிறது.

மக்கள் வெற்றிபெற்று சோஷலிஸப் பாதையில் அடி எடுத்து வைப்பதற்கு அடிப் படையான அம்சங்களில் ஒன்றாக, சுரண்டுபவர்களின் அரசு முறையைப் பூரணமாக உடைத்தெறிந்து, பூரணமாக ஒரு புதிய ஆட்சி முறையை தோற்றுவிக்கவேண்டும், அடியிலிருந்து உயர்மட்டம்வரை மக்களின் தோற்றுவாயாக மக்களுடன் நெருங்கிய தொடர்புடையதாக—அவர்கள் மேற்பார்வையிலான—எங்கள் மத்தியில் எமது தேசிய விடுதலை கௌன்சில்களில் இருந்ததைப் போன்ற அரசியல் அமைப்பு ஏற்படுத்த வேண்டியது அவசியம் என்பதையும் எமது மக்கள் புரட்சியின் அனுபவம் எடுத்துக் காட்டுகின்றது. முதலாளித்துவ அரசு இயந்திரத்தை உடைத்தெறியாமல் அதன் உதவியுடன் சோஷலிஸத்தை நிர்மாணிக்க முடியும் என்ற நவீன திரிபுவாதிகளினது போதனைகள் வெறுமனே பெரும் மயக்கமும் துரோகமும் அன்றி வேறேதுமில்லை.

புரட்சியின் வெற்றிக்கான போராட்டம்—மக்கள் ஆட்சியை நிறுவுவதற்கான போராட்டம்—சோஷலிஸத்தைக் கட்டி வளர்ப்பதற்கான போராட்டம் வெற்றி பெறுவதாயின், புரட்சிகரக் கட்சி மக்களுக்கு வழிகாட்டினால்—அக் கட்சி மார்க்சிஸ—லெனினிஸத்தின் வெற்றிகரமான போதனைகளில் நம்பிக்கை வைத்து விசுவாசமாக அவற்றை அமுல் நடத்துமானால் அது சாத்தியமாகும் என்பதையும் அது எடுத்துக் காட்டுகின்றது.

### இன்றைய அல்பேனியா

அன்புத் தோழர்களே!

எமது தாய்நாடான அல்பேனியா விடுதலை பெற்ற 20-வது ஆண்டுவிழாவின் போது, சுதந்திர, சுயாதிபத்திய, சோஷலிஸ நாடாக—தொழில் அடிப்படையில் நன்கு வளர்ச்சி யடைந்த, பெருமளவு சோஷலிஸ அபிவிருத்தி கொண்ட, வளர்ச்சியுற்ற கலாச்சாரமுடைய, உயர்ந்த வாழ்க்கைத் தரம் உடைய, உறுதியான சமூக அமைப்பைக் கொண்ட நாடாக— நேசபூர்வமான உழைக்கும் வர்க்கங்கள் பிரிக்க முடியாத சமூக அரசியல் உறவுகளால் பிணைக்கப்பட்டு, முன்பு எப்போதும் இருந்ததை விட பலமான சர்வதேசிய நிலைமையைக் கொண்ட நாடாக உள்ளது.

1944 நவம்பர் 29-ந் தேதியில் இருந்து இருபது வருடங்கள் மட்டும்தான் கடந்து சென்றுள்ளன. ஆனால், இன்றுள்ள அல்பேனியா பழைய அல்பேனியா போல் இருளடைந்ததாக இல்லாமல் ஒளிமயமானதாய் இருக்கின்றது. சரித்திரப் பிரசித்திபெற்ற அந்த நாளின் திருப்பத்தினுடைய முக்கியத்துவத்தை இது காட்டுகிறது. எமது மக்களினதும், எமது கட்சியினதும் வெல்ல முடியாத சக்திக்கும், சாதனைகளுக்குமுள்ள பெருமையைக் காட்டுகின்றது.

### பழைய அல்பேனியா

ஐய்யோ! சென்ற காலங்களில் மக்கள் எத்தனை இன்னல்களைக் கடந்து சென்றனர். ரோமானியர்கள் முதல், பைசாண்டியர்கள் (புராதன கிரேக்க)ஸ்லாவியர், ஒட்டொமானியர் (துறுக்கியர்) வகுப்புவாத அண்டை நாட்டினர், பல்வேறு ஏகாதிபத்திய வல்லரசுக்கள் தொட்டு இத்தாலிய, ஜெர்மன் பாசிஸ்டுகள் வரையிலான காட்டுமிராண்டிக் கூட்

11-ம் பக்கம் பார்க்க

# அமெரிக்க ஆணைக்கு அடிபணிந்தே யூ. என். பி. ரூபாவின் மதிப்பைக் குறைத்தது

—1-ம் பக்கத் தொடர்

சாதாரண மக்களுக்குவிளங்கக் கூடிய முறையில் சொல்வதானுல், எந்த ஒரு நாட்டின் நாணய மதிப்பும், அதன் உறுதியும் அந்த நாட்டின் பொருளாதாரச் செழிப்பில் தங்கியுள்ளது. இலங்கையில் இருந்து நாம் ஏற்றுமதி செய்பவற்றின் மதிப்பு, நாம் இறக்குமதி செய்பவற்றின் மதிப்பை

## மக்களின் வயிற்றில் மீண்டும் அடித்தது

விடக் கூடியதானுல் எமது பொருளாதார நிலைமை உறுதியானது. இலங்கை ரூபாவுக்கு மதிப்பு ஏற்படும் என்றுகிவிடும் அல்லாமல், எமது இறக்குமதியின் மதிப்பு, இன்று நடைமுறையில் உள்ளது போல் ஏற்றுமதியின் மதிப்பிலும் பார்க்க கூடி விட்டால், எமது ரூபாவின் மதிப்பு குறைந்து விடும்.

பல வருடங்களாக எமது ஏற்றுமதியின் மதிப்பு, குறிப்பாக எமது பிரதான ஏற்றுமதிப் பொருளான தேயிலைக்கு எமக்குக் கிடைக்கும் விலைகள் படிப்படியாகக் குறைந்து வந்துள்ளன. இதற்குக் காரணம், சர்வதேசிய மூலதனக்காரர்களின் கூட்டமொன்று செய்த சூழ்ச்சியால், வளர்ச்சி யடையாத நாடுகளின் தேயிலை போன்ற பிரதான ஏற்றுமதிப் பொருட்களின் விலைகளை தன்னிச்சையாகக் குறைத்ததனுலேயாகும். எமது தேயிலை குறைந்த விலைக்கு வாங்கப்பட்டதன் காரணமாக, பிரிட்டனில் தேநீர் அருந்துபவருக்கு லாபம் என்று எவரும் கருதுவார்களேயானுல் அது முற்றிலும் தவருன எண்ணமாகும் என்பதையும் குறிப்பிட வேண்டும். எமது தேயிலை குறைந்த விலைக்கு வாங்கப்படுவதோடு, இங்கிலாந்தின் ஒரு கோப்பை தேநீரின் விலை கூட்டவும் பட்டது. இடையிலே உள்ள மூலதனக்காரர்கள் இலங்கை மக்களையும், பிரித்தானிய மக்களையும் சுரண்டுகின்றனர் என்பது இதனுல் புலனுகின்றது.

### அம்பலத்துக்கு வந்த உண்மைகள்

எம்மையும், பிரித்தானிய மக்களையும் திருகி கொள்ளை இலாபமடிக்கின்ற பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளின் கையில் அநேகமான எமது தோட்டங்கள் இருப்பது மட்டுமல்லாது, எமது தேயிலை ஏற்றுமதியை நடத்துகின்ற ஏஜன்ஸி வர்த்தக நிலையங்களும், அவர்களது கையிலேயே இருப்பதனுல் இது சாத்தியமாகின்றது. இந்த ஏஜன்ஸி வர்த்தக நிலையங்கள் லண்டனில் இருந்து டொலர் பிரதேசங்களுக்கு எமது தேயிலையை மறுபடியும் ஏற்றுமதி செய்து பெரும் இலாபம் பெறுவதோடு, டொலர்களும் பெறுகின்றனர் என்று அண்மையில் அம்பல படுத்தப்பட்டுள்ளது. இந்த லாபமும், டொலரும் உண்மையில் இலங்கைக்குக் கிடைத்திருக்க வேண்டியவை. 1960–1966 ஆண்டுகளில் பிரிட்டனுக்குள் இறக்குமதி செய்யப் பட்டு மறுபடி ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் மொத்தம் பின் வருமாறு:

1960 — 29 லட்சம் ருத்தல்
1962 — 108 லட்சம் ருத்தல்
1964 — 143 லட்சம் ருத்தல்
1966 — 169 லட்சம் ருத்தல்

எமது பொருளாதார சீர்கேட்டிற்கு முக்கிய காரணங்களில் ஒன்ருன வெளிநாட்டு ஏகாதிபத்திய நலமிகளின் இந்தத் தொண்டைக் குழிப் பிடியிலிருந்து இலங்கையை விடுவிக்க இலங்கையின் எந்த அரசாங்கமும் — யூ. என். பி. ஆனுல் என்ன, எஸ். எல். எப். பி. ஆனுல் என்ன—துணியவில்லை.

ஏகாதிபத்திய வாதிகள், எமது ஏற்றுமதிப் பொருட்களான தேயிலை றப்பர் போன்றவற்றின் விலையைக் குறைத்து வந்ததோடல்லாமல், தமது நாடுகளில் இருந்து எமது நாட்டிற்கு இறக்குமதி செய்த பொருட்களின் விலையையும் படிப்படியாக கூட்டி வந்துள்ளனர். இரு மடங்கான சுரண்டல் இருபக்கத்தாலும் நாம் சுரண்டப் படுகின்ருேம். அண்மையில், இந்த விஷயத்தைக் குறித்து, பலமான கட்டுரைகள் டைம்ஸ் ஒஃப் சிலோன் பத்திரிகையில் வெளியாயின. டைம்ஸ் ஒஃப் சிலோன் போன்ற பிற்போக்குப் பத்திரிகைகள் இப்பேர்ப்பட்ட செய்திகளைப் பிரசுரிப்பதன் நோக்கம் என்ன என்பதில் எமக்குச் சந்தேகம் இல்லாத போதிலும், இக் கட்டுரைகளில் உள்ள விபரங்களும் அபிப்பிராயங்களும் அப்பட்டமான—மறுத்துரைக்க முடியாத உண்மைகளாகும்.

''பொருளாதார ஏகாதிபத்தியம்'' என்ற தலைப்பில் 18-10-67-ல் பிரசுரிக்கப்பட்ட இக் கட்டுரையில், எமக்குக் கிடைத்துள்ள உதவிகளில் அநேகமானவை உதவிகளே அல்ல. அது, 'பெருந்தன்மையுடன் உதவி கொடுப்பவருக்குத்தான்' உதவியாக அமைந்துள்ளது. 'கடன் கொடுப்பவரின்' பொருட்களை 'கடன் கொடுப்பவர்' நிர்ணயிக்கின்ற விலைக்கு வாங்குவதற்காகக் கொடுத்த கடனுதவியாகவே இருந்திருக்கிறது'' என்றும்,

''பழைய காலனி ஆதிக்க நாட்களில் எமது வெளிநாட்டு எஜமானர்கள் எம்மைச் சுரண்டினர். ஆனுல், அன்று எமது மக்களுக்கு உணவும், உடையும் கொடுக்கும் பொறுப்பு அவர்களுக்கு இருந்தது. கடந்த பத்தொன்பது ஆண்டுகளாக அவர்கள் இந்தப் பொறுப்புகளிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டனர். ஆனுல் உதவி என்ற பெயரில் சுரண்டல் தொடர்கிறது. தமக்கு உணவும், உடையும் தேடுவதில் மக்கள் மென்மேலும் அவதிக்குள்ளாகின்றனர்'' என்றும் அக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டது.

1-11-67-ல் மற்றுமொரு கட்டுரையில் இந்த உதவித் திட்டங்களின் பின்னுல் உள்ள ஏமாற்று குறிப்பிடப்பட்டு மேலும் தெளிவாக அம்பலப் படுத்தப்பட்டுள்ளது. அக் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளபடி டைம்ஸ் ஒஃப் சிலோனின் வாஷிங்டனிலுள்ள ராய்ட்டர் நிருபர் பின்வருமாறு அறிவித்தாராம்:

அமெரிக்காவிலுள்ள அறுவடையைத் தொடர்ந்து அந்த அரசாங்கம் ''அமெரிக்காவுக்குள் பண்ணைப் பொருட்களின் விலை குறைவதைக் கட்டுப்படுத்த'' வெளிநாட்டில் புதிய பங்கீடுகள் செய்யப்போகிறதென்றும் ''சில நன்கொடையாகவும், வேறு சில, சலுகைகள் கொண்ட விற்பனையாகவும்'' இருக்குமாம்.

''இந்த அறிக்கை வெளியான அடுத்த நாள் கொழும்பில் ஓர் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. ஐயோ, அது ''நன்கொடையாக'' இருக்கவில்லை. அமெரிக்க அரசாங்கம் கிட்டத்தட்ட 80,000 தொன் மாவும் 5000 தொன் தானியமும் தருவதாகவும், இதற்கு இருபது வருட காலத்

12-ம் பக்கம் பார்க்க

---

—4-ம் பக்கத் தொடர்

நாங்கள், எங்கள் நாட்டில் அழுக்குப் படிந்த நவீன திரிபுவாதத்திற் கெதிராக மாபெரும் போராட்டத்தை நடத்தி வெற்றியடைந்ததோடு, அவர்கள் பக்கம் இருந்த தொழிலாளி, விவசாயி வர்க்கத்தினரையும் பெருமளவு வென்றெடுத்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனுல், சில பாராளுமன்ற அங்கத்தினரும், இன்னும் சில தேசியத் தலைவர்களும் அவர்கள் பக்கமே நிற்கிருர்கள். அதன் பின்னர், எமது கட்சியைப் பலப்படுத்தியதோடு வெகுஜன ரீதியான இயக்க வேலைகளிலும் முன்னேற்ற மடைந்துள்ளோம். ஆயினும் நாங்கள் இன்னும் நெடுந்தூரம் பிரயாணம் செய்ய வேண்டியுள்ளது.

அல்பேனியாவில், உங்கள் கட்சியினுல் சரியான மார்க்சிஸ—லெனினிஸ நிலையை எடுத்து எத்தனையோ கஷ்டங்களுக்கு எதிராக எழுப்பிய சோஷலிஸ வெற்றிகளை நாங்கள் கண்டும் கேட்டும் உள்ளோம். இவை, எம்மை மேலும் உற்சாகமாக வேலை செய்வதற்கு ஓர் உந்துதலாயிருக்கும்.

நான் உங்கள் தொழிற் கட்சியையும், அல்பேனிய மக்களையும் வாழ்த்துவதோடு, நீங்கள் சோஷலிஸ நிர்மாணத்தில் மேலும் முன்னேறி உண்மையான மார்க்சிஸ—லெனினிஸப் பதாகையை என்றும்-எப்பொதும்—உயர்த்தி நேராகப் பிடித்து வெற்றிகாண வேண்டுகின்றேன்.

உண்மையான மார்க்சிஸ—லெனினிஸ வெற்றிப் பதாகையின் கீழ் ஏனைய புரட்சிவாதிகளுடனும் நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து, அணி திரண்டு முன்னேறி, உலக ஏகாதிபத்தியத்தை அழித்தொழித்து அச் சவக்குழியின் மேல் ஒரு புதிய சுரண்டலும் யுத்தங்களும் இல்லாத-நாகரீகத்தைக் கட்டி எழுப்புவோமாக!

---

10–ம் பக்கத் தொடர்

## சோஷலிஸம் . . . .

டத்தினர் கையில் நெருப்புடன் வந்து, எமது நாட்டில் புகுந்து எமது நாட்டை தீமூட்டி அல்லோல கல்லோலப்படுத்தினர்; எமது மக்களை கொலை செய்தனர்; நசுக்கிப் பிழிந்தனர்; இந்த இன்னல்களும் துரதிர்ஷ்டமும் போதாதென்று, உள்நாட்டு நிலப்பிரபுக்களும், சிற்றரசர்களும் முதலாளி வர்க்கத்தினரும், துரோகிகளும் மக்களை அடக்கி ஒடுக்கிச் சுரண்டி வந்தனர். நாட்டை அந்நியர்களுக்கு விற்றனர். அவர்களை- எமது பரந்த உழைக்கும் மக்களை—உரித்தெடுத்து இரத்தத்தை உறிஞ்சிக் கொண்டனர்.

மற்றவை ஒரு புறமிருக்க, மிஜ்ஜெனி கூறுவதைப்போல் எமது நாட்டில் காய்ந்தரொட்டித் துண்டும், தானியமும் ஏதோ ''புராதனகால''ப் பொருட்களாய் விட்டன. அல்பேனியனின் வாழ்க்கையில் சந்தோஷமான நாள் ஒன்று இருக்கவில்லை. தொழிலாளி ஒரு நாளுக்கு 10-14-18-மணி நேரம்வரை முதுகை முறித்து உழைத்தான். வியர்வை சிந்தினுன். தனது வாழ்க்கையைக் கொண்டு செல்ல மிகக் குறைந்த-எள்ளளவு- வசதிகள் கூட அவனுல் பெற முடியவில்லை. விவசாயியோ இரவும் பகலும் பாடுபட்டான்; சேற்றிலேயே புதைந்து கிடந்தான்; அவனது பிள்ளைகளோ பட்டினியாலும் மலேரியாக் காய்ச்சலினுலும் செத்து மடிந்தனர். மலைநாட்டவர்க்கோ எழுந்து நிற்க முடியாத நிலை. அங்கு ''கோழிகள் சிறு கற்களை உண்டு வாழ்ந்தன'' சொற்பமான புத்திஜிவிகள், சிதறுண்ட கனவுகளுடன் அங்குமிங்கும் அலைந்து திரிந்தனர். அல்பேனியாவில் நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவ சமூக அமைப்பு முறை நிலவியது. உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியும், உற்பத்தித் தொடர்புகளும் வளர்ச்சியடைய விடாது ஆளும் வர்க்கத்தினராலும், வெளிநாட்டு மூலதனக் காரர்களினுலும் தடைசெய்யப்பட்டது. அவர்கள் எமது தாய்நாட்டை ஒரு சந்தையாகவும், மூலப் பொருட்கள் சேகரிக்கும் இடமாகவும் பாவித்தனர். எமது நாட்டில் போதியளவு பாடசாலைகளும் ஆஸ்பத்திரிகளும் இருக்கவில்லை. ஆனுல், மூட நம்பிக்கைத் தளங்களான கோவில்கள், பள்ளிவாசல்கள், துறவிகளின் மடங்கள் விக்கிரகங்கள் போன்றவை தான் அதிகமாக இருந்தன, ஸ்சொக் மன்னனினதும், பாசிஸ்டுகளினதும் ஆட்சியின் கீழ் தனது உரிமைகளுக்காகப் போராடுகின்ற மனிதனின் வாழ்க்கை ஒரு றவைக்குண்டுக்கு, அல்லது ஒரு முழக் கயிறுக்குச் சமானமாக்கப்பட்டது ஆட்சிக் கும்பலினுல் ஏற்பட்ட இரத்த வெள்ளம் நூற்றுக் கணக்கான வீடுகளைச் சின்னுபின்னப்படுத்தி ஒரு வருடத்தில் மனித கலாச்சாரமற்ற வெற்றிடங்களாக மாற்றியது. அங்கு மனிதன் சராசரி 38 வயதுவரைதான் உயிர் வாழ்ந்தான்.

தகாத ஆட்சிகளும் வெளிநாட்டுவிரோதிகளும் எமதுமக்களையும் எமதருமைத் தந்தையர் நாட்டையும் இப்பேர்ப்பட்ட அவல நிலைக்கு ஆளாக்கினர். இந்த விதமான நிலையில் இருந்து கொண்டுதான் நாம் சோஷலிஸப் பாதையில் முன்னேற அடியெடுத்து வைத்தோம்.

எமது மக்களும் எமது கட்சியும் சோஷலிஸத்தை நிர்மாணிப்பதற்காக நடந்து சென்ற பாதை எந்தவகையிலும் மலர் தூவப்பட்டதாய் இருக்கவில்லை. அது சடினமான—ஆனுல் பெருமைக்குரியபாதை அதில் எமது திறமைகள் அனைத்தும் — எமது உறுதி, துணிவு யாவும்—எமது மக்களினதும் கட்சியினதும் சகல முயற்சிகளும் விடாப்பிடியும் வேண்டியளவு இருந்தன.

கடந்த காலத்தில் ஏற்பட்ட பின்தங்கிய நிலையுடன் யுத்தத்தினுல் ஏற்பட்ட சேதங்களினுல் உண்டான இடையூறுகளும் சேர்ந்து கொண்டன. அல்பேனியா தரைமட்டமாக்கப்பட்டது. பஞ்சமும் பட்டினியும், கொடிய நோய்களும் நாட்டைப் பயமுறுத்தின; ஈவிரக்கமற்ற, வகுப்புவாத, ஏகாதிபத்திய அண்டை நாடுகளின் தொல்லைகளும் அதிகரித்தன.

இப்பேர்ப்பட்ட கஷ்டமான நிலைமைகளில் தான் எமது வீர மிக்க மக்கள்—வயோதிபரும் இளம் வயதினரும்—கம்யூனிஸ்ட் கட்சியின் அறைகூவலை ஒருமித்து ஏற்றுக் கொண்டு தீபச் சுடர்போன்ற புரட்சிகரக் கோஷமான ''ஒரு கையில் பிக்கானுடனும் மறு கையில் துப்பாக்கியுடனும் சோஷலிஸத்தை நிர்மாணிப்போம்'' என்ற கோஷத்தை ஏற்று விவரிக்க முடியாத உற்சாகத்துடனும் சுய தியாகத்துடனும் முன்னேறிச் சென்றனர் என்பதை விடுதலைக்குப் பிந்திய ஆரம்ப காலங்களில் வாழ்ந்தவர்கள் நினைவில் வைத்திருப்பர். இன்றைய வாலிபர்கள் இதனை என்றும் மறக்கலாகாது.

-தொடரும்

# மக்கள் பொறுமையின் எல்லையை அடைந்து விட்டனர்

—11-ம்பக்கத் தொடர்

திற்குள் 47 லட்சத்து 40 ஆயிரம் ரூபா டொலர்களில் கொடுக்கப்படவேண்டும் எனவும், $2\frac{1}{2}\%$ விகிதம் வட்டியும் கொடுக்கப்படவேண்டும் எனவும் இவ் ஒப்பந்தத்தில் உள்ளது.

பத்திரிகையில் எழுதப்பட்ட கட்டுரை இந்த ''உதவியை'' அமெரிக்க அரசாங்கத்தின் ஏற்றுமதித் திட்டம் என்று சரியாகக் குறிப்பிடுகின்றது: எமது ரப்பரை நியாயமான விலைக்கு நீண்டகாலத்திற்கு வாங்க அமெரிக்கா ஓர் உடன்படிக்கை செய்தால், அல்லது எமது தேயிலைக்கு நியாயமான விலை கொடுக்கும் ஒப்பந்தம் செய்தால் துரதிர்ஷ்டவசமான இலங்கைக்கு எவ்வளவு பயனுள்ளதாய் இருக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளது.

அப்படியான உதவி, உண்மையான உதவி என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அப்பேர்ப்பட்ட உதவி சோஷலிஸ சீனாவிடமிருந்து மட்டுமே எமக்குக் கிடைத்திருக்கிறது. ஏகாதிபத்திய நாடுகள் இலங்கை போன்ற வளர்ச்சி குன்றிய நாடுகளைச் சுரண்டுவதில்தான் அக்கறையுள்ளவை ஆதலால் அந்நாடுகள் எமது ஏற்றுமதிப் பொருட்களை மலிவாக வாங்கி, எமது இறக்குமதிப் பொருட்களை உயர்ந்த விலைக்கு விற்கின்றனர். அந்த முறையில் எம்மை இரண்டுரக்கமும் சுரண்டுகின்றனர். இப்படிக் கொள்ளையடித்த பணத்தில் சில வேளைகளில், ஒரு சிறு பகுதியை வட்டியுடன் திருப்பிக் கொடுக்க வேண்டிய கடன் உதவியாகத் தருகின்றனர்.

எமது பொருளாதார நெருக்கடி வளர்ந்துள்ளதற்கான காரணங்கள் இவைதான். துரிதமாக அதிகரித்து வருகின்ற ஜனத்தொகைக்குத் தேவையான அத்தியாவசிய பாவனைப் பொருட்களை உற்பத்தி செய்யவும் எம்மால் முடியவில்லை. எமது ஏற்றுமதியில் குறைந்துகொண்டு போகும் விலைகளை வைத்துக்கொண்டு அத்தியாவசிய தேவைப் பொருட்களைஇறக்குமதி செய்யவும் எம்மால் முடியவில்லை. இதுவே எமது நெருக்கடிக்குக் காரணம்.

எமது நெருக்கடியின் சாராம்சம் இதுதான். வெளிநாட்டு ஏகாதிபத்தியப் பிடியிலிருந்து எம்மை விடுவித்துக் கொள்வதன் மூலம்தான் இந்த நெருக்கடியை இல்லாமற் செய்ய முடியும். தனியொரு ஏற்றுமதி உற்பத்திப் பொருளை—தேயிலையை- நம்பியிருக்கும் நிலையிலிருந்து நாம் விடுபட வேண்டும். எமது பொருளாதாரத்தைப் பல துறைகளுக்குப் பரப்பவேண்டும். துரிதமான தொழில்மயத்தின் மூலமும், பெரும் விவசாய அபிவிருத்தியின் மூலமும் உற்பத்தியைப் பெருக்க வேண்டும். விவசாய அபிவிருத்திக்கு மலையுச்சிகளில் காடுகள் வெட்டப்பட்டதால்—நில அரிப்பால்—பாழடைந்த நீர்ப்பாசனத்தைச் சீர்படுத்த வேண்டும். இந்த நடவடிக்கைகள் மூலம்தான் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க முடியும்.

மக்களை துணிவுடன் தட்டி எழுப்பி ஏகாதிபத்திய மூலதனங்களைத் தாக்கக் கூடிய ஓர் அரசாங்கத்தினால் மட்டுமே இவற்றைச் சாதிக்க முடியும். யு. என். பி. ஏகாதிபத்திய தாசர்களின் கட்சி என்பதனால் அது இதனைச் செய்யத் தயாராயில்லை. அதற்குப் பதிலாக யு. என். பி. அமெரிக்க ஆதிக்கம் உள்ள சர்வதேச நாணய சபையின் ஆணைக்கு அடிபணிந்து எமது பொருளாதாரத்தை வெளிநாட்டு ஏகாதிபத்தியத்தின் வண்டிச் சில்லுகளில் பிணைத்துள்ள சங்கிலியை மேலும் இறுக்கிக் கட்டுகின்றது.

டட்லிக்கும், ஜே ஆருக்கும் இடையிலான வேற்றுமைகளை மூடிமறைத்துச் சமாளிப்பதற்காக அண்மையில் நடைபெற்ற பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில், ஜே. ஆர். இன்று 1966ல் இருந்ததை விட பொருளாதார நிலை மோசமடைந்துள்ளதாகவும், அரசாங்கம் மக்கள் விரும்பாத முடிவுகள் எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என்று கூறியிருக்கின்றார். சென்ற தடவை மக்கள் விரும்பாத நடவடிக்கைகள் பற்றி ஜே. ஆர். பேசியதும், அரிசி வெட்டு ஏற்பட்டது. இந்த முறை நாணய மதிப்பிறக்கம் ஏற்பட்டுள்ளது. யங்கி டிக்கிகளுக்கு தமது எஜமானனின் மனதில் உள்ளது என்னவென்று தெரியும். பவுன் ஸ்டர்லிங் 14.3% விகிதமாக மதிப்பிறக்கப்பட்டதைத் தொடர்ந்து, எமது விலை குறைந்துள்ள ஏற்றுமதிப் பொருட்கள், குறிப்பாக தேயிலை கூடிய விலைக்கு விற்கலாம் என்ற நம்பிக்கையில் எமது ரூபா 20% விகித மதிப்பிறக்கம் செய்வதென முடிவெடுக்கப் பட்டுள்ளது. ஆனால் எமது தேயிலையின் 38% விகிதம் பிரிட்டனுக்குப் போகிறது. எம்மிடம் அதிகமான தேயிலை வாங்கும் தனியொரு நாடு பிரிட்டன. நாம் எமது ஏற்றுமதியை பெருக்கி கூடிய தேயிலையை விற்பதில் வெற்றி கண்டாலும் கூட எமக்குக் கூடுதலாகக் கிடைக்கப்போகின்ற பவுன் ஸ்டர்லிங், ஸ்டர்லிங் பிரதேசத்தில் இல்லாத நாடுகளில் குறைவாகத்தான் இறக்குமதி செய்யக் கூடியதாய் ஏற்படும். பவுண் ஸ்டர்லிங் மதிப்பிறக்கம் செய்யப்பட்டதால் இந்த நிலை உருவாகியுள்ளது. அதாவது எமது ஏற்றுமதியின் உண்மையான மதிப்பு குறைந்துவிடும். அது மட்டுமல்லாமல் தேயிலை ஏற்றுமதியால் கூடுதலாகக் கிடைக்கின்ற வருமானம், விதேசிய பிரதானமாக பிரித்தானியர் கையிலேயே போய்ச்சேரும். கூடுதல் வருமானம் இலங்கையின் நன்மைக்குப் பயன் படுத்தப்படும் என்பதற்கு உத்தரவாதம் ஏதுமில்லை.

துரதிர்ஷ்டவசமாக செயற்கைஉரம், இரசாயனப் பொருட்கள் மற்றும் தொழில், விவசாய அபிவிருத்திக்குத் தேவையான இயந்திரப் பொருட்கள் ஆகியவற்றைத் தவிர, எமது இறக்குமதிப் பொருட்களில் அநேகமானவை ஸ்டர்லிங் பிரதேசத்தில் இல்லாத அல்லது, நாணய மதிப்பீடு செய்யாத ஸ்டர்லிங் பிரதேசத்திலுள்ள நாடுகளிடமிருந்துதான் கிடைக்கின்றன. பிரிட்டனிலிருந்து எமது இறக்குமதியில் 15% விகிதம் மட்டுமே கிடைக்கின்றது. எமது வர்த்தக அமைப்பு மாறிவிட்டது. எமது இறக்குமதிகளில் அநேகமானவை குறிப்பாக, எமது இறக்குமதியில் கிட்டத் தட்ட அரைவாசியான உணவுப் பொருட்களும், எமது இயந்திரங்களில் பெரும்பகுதியும் ஸ்டர்லிங் அல்லாத பிரதேசங்களிலிருந்துதான் இறக்குமதி செய்யப்படுகின்றன. உளுந்து பர்மாவிடமிருந்தும், மிளகாய், பயறு, உள்ளி, அரிசி ஆகியவை சீனாவிலிருந்தும், மல்லி ருமேனியாவிலிருந்தும் வட—ஆபிரிக்காவிலிருந்தும், கொண்டக் கடலையும் பட்டாணியும் கிழக்கு ஆபிரிக்காவிலிருந்தும், பேரீச்சம்பழமும் மைசூர் பருப்பும் தென் கிழக்கு நாடுகளிலிருந்தும், பாசிப்பயறு லெபனானிலிருந்தும், மா அவுஸ்ரேலியாவிலிருந்தும் இத்தியாதிப் பொருட்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன.

இவை யாவும் மற்றும் ஸ்டர்லிங் பிரதேசமல்லாத நாடுகளிலிருந்து கிடைக்கும் சகல பொருட்களும் விலை ஏறிவிடும். அதனால்தான் அமெரிக்க ஆதிக்கமுள்ள சர்வதேச நாணய சபை நாணய மதிப்பிறக்கம் செய்ய எம்மை நிர்ப்பந்தித்துள்ளது. நாம் எமது இறக்குமதிப் பொருட்களை டொலர் பிரதேச நாடுகளிடமிருந்து உயர்ந்த விலைக்கு வாங்குவதை அவர்கள் விரும்புகின்றனர். இதன் பலனாக நாம சர்வதேச நாணய சபைக்குப் பிச்சைப் பாத்திரமேந்தி மேலும் பெரும் வட்டிக்குக் கடன் வாங்கச் செல்ல நேரிடும். இதன் மூலமாக எமது நாடு அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பரிபூரணமான அடிமை நாடாக மாறும். சர்வதேச நாணயசபையின் இது போன்ற ஆலோசனைக்கு இணங்கியதால் தான் இந்தியா இன்று இந்த நிலைக்கு வந்துள்ளது.

இலங்கை ரூபாவின் மதிப்பிறக்கத்தினால் உடனடியாக ஏற்படும் பாதிப்பு என்னவெனில், ஏற்கனவே அளவுக்கு மீறியுள்ள எமது வாழ்க்கைச் செலவு மேலும் உச்ச நிலை அடையும் என்பதுதான். ஊதியம் பெறுவோர் சகலரினதும் உண்மையான வருமானம் குறையும். இன்று எமது கையில் இருக்கும் ஒரு ரூபாவின் பெறுமதி 80 சதமாகிவிட்டது. எமது குறைந்த சம்பளத்தில் சென்ற மாதம் நாம் வாங்கியவற்றை இப்போது வாங்க முடியாது. நாணய மதிப்பிறக்கத்தைச் சமாளிப்பதற்கு அரசாங்கம் முன் வைத்துள்ள சிறு சலுகைகள் மக்களின் வாழ்க்கைத் தரத்தில் கிடைத்துள்ள அடியை சிறிதளவேனும் மென்மைப் படுத்தாது: குறைந்த சம்பளம் பெறுகின்ற தொழிலாளர்கள், லிவசாயிகள், கீழ்மட்ட மத்தியதர ஊழியர்கள் பெரிதும் பாதிக்கப் படுவர். அரசாங்கம் விலைக் கட்டுப்பாடு ஏற்படுத்த—கள்ளப் பதுக்கலைத் தடுக்க—எடுக்கும் முயற்சிகளை எவரும் பிரமாதமாகக் கணிப்பதில்லை. இவை வெறும் பத்திரிகைப் பிரச்சாரமாகவே இருக்கும். உருப்படியாக இருக்காது.

இது வரையிலான மிகப் பெரிய தாக்குதலை யு. என். பி. மக்கள் மீது தொடுத்துள்ளது. இதற்கு தொழிலாளி வர்க்கம் அளிக்கும் பதில் என்ன? பாராளுமன்றத்தில் அரிசி வெட்டின் போது செய்ததைப் போல் இன்னுமொரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் வைக்கப் போகிறோமா? அதன் பின், எல்லாம் செய்தாகி விட்டதெனத் திருப்திப் படப் போகிறோமா? ''பாராளுமன்றத்தைக் கலை'' என்ற கோஷம் மக்களுக்கு விமோசனம் அளிக்குமா? இது, உண்மையான வியாதியிலிருந்து, தவறான காரணத்திற்கு மக்களின் கவனத்தைத் திசைதிருப்ப உதவலாம். இன்றுள்ள நிலையில் எதிர்க் கட்சியினர் அரசாங்கம் அமைத்தால், இப் பிரச்சினைக்கு அவர்கள் தீர்வு காண்பர் எனபதற்கு ஏதாவது உத்தரவாதம் உண்டா? இதற்கு முன் இரு பண்டாரநாயக்கா அரசாங்கங்களும், சமசமாஜிகளும் சேர்ந்த கூட்டரசாங்கமும் இருந்தது. இந்த அரசாங்கங்கள் எதுவும் சரியான பாதையில் ஓர் அடியேனும் எடுத்து வைக்கவுமில்லை; அதற்கான அறிகுறிகளைக் கூடக் காண்பிக்கவுமில்லை என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

எதிர்க் கட்சிகள் இன்று காட்டுகின்ற சோம்பல், அரசாங்கத்திற் கெதிராக மக்களைத் தட்டி எழுப்புவது ஒரு புறமிருக்க, இந்த முக்கியமான பிரச்சினை பற்றி அறிக்கை கூட விடாத அளவுக்கு இருக்கிறது. அப்படி என்றால் இப் பிரச்சினையைத் தம்மால் தீர்க்க முடியும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இல்லைஎன்பதன் அறிகுறியல்லவா இது?

உண்மை என்னவென்றால், இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைத் தீர்க்கக் கூடிய சக்தி பாராளுமன்றத்தின் அரசாங்கத்திலுமில்லை; எதிர்ப்பக்கத்திலுமில்லை. நாணய மதிப்பிறக்கம் நோயின் ஓர் அறிகுறி மட்டுமேயாகும். மாற்றப்படவேண்டியதுநோய்தான். அதற்கு ஒரேவழிதான் உண்டு.

வாழ்க்கைச் செலவு உயர்ந்தால் அதனைச் சமாளிக்கச் சம்பள உயர்வு கோருகின்ற இயக்கமாக மட்டும் இதனைக் கட்டுப்படுத்தக் கூடாது; கட்டுப்படுத்தவும் முடியாது. அதற்கும் மேலாகச் சென்று இந்தச் சீர்கேடான-அடிக்கடி தோன்றுகின்ற பொருளாதார நெருக்கடியை உருவாக்குகின்ற பொருளாதார அமைப்பைத் தகர்த்தெறியப் போராட வேண்டும். சகல ஏகாதிபத்திய பிற்போக்கு சக்திகளுக்கு மெதிராகத் தாக்குதல் தொடுப்பதற்கு சகல புரட்சிகர சக்திகளையும், முற்போக்கு சக்திகளையும் நாம் அணி திரட்ட வேண்டும். வெளிநாட்டு ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம், யு. என். பி. மற்றும் அதன் பிற்போக்கு சகாக்கள் யாவரையும் ஒழித்துக் கட்டும் ஓர் இயக்கததைக் கொண்டு செல்ல வேண்டும். மக்கள் தமது பொறுமையின் எல்லையை அந்டைதுவிட்டனர்.

## வீரஞ் செறிந்த அல்பேனியாவுக்கு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி வாழ்த்து!

அல்பேனிய மக்கள் குடியரசின் 23-வது தேசிய தினத்தை முன்னிட்டு 1967 நவம்பர் 29-ம் திகதி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டி அல்பேனிய தொழிற் கட்சியின் மத்திய கமிட்டிக்கு ஒரு வாழ்த்துச் செய்தி அனுப்பியுள்ளது.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டியின் சார்பில் பின் வரும் இச் செய்தி தோழர் என். சண்முகதாசனால் அனுப்பப்பட்டது.

அல்பேனிய மக்கள் குடியரசின் 23-வது தேசிய தின விழாவின் போது இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டி, அல்பேனிய மக்களுக்கும், அவர்களது அரசாங்கத்திற்கும், அவர்களது தொழிற் கட்சிக்கும் அவர்களது மகத்தான மார்க்சிஸ—லெனினிஸத் தலைவர் தோழர் அன்வர் ஹோஜாவிற்கும் தனது மனமுவந்த வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றது.

ஏகாதிபத்தியத்திற்கும் வெளிநாட்டுப் பிற்போக்கிற்கும் எதிராக, டிட்டோவிய, குருஷ்சேவிய திரிபுவாதத்திற்கு எதிராக உறுதியுடன் போராடியதற்காக லெனினிஸத்தின் வெல்லற்கரிய உண்மைகளை சிறப்பாக பாதுகாத்ததற்காக அல்பேனிய தொழிற் கட்சியை வாழ்த்துகிறோம்.

சோஷலிஸ நிர்மாணத்தில் பெற்றுள்ள வெற்றிகளுக்காக, அல்பேனிய மக்களைப் போற்றுகிறோம். அவர்கள் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை பாதுகாப்பதற்கும், முதலாளித்துவம் மறுபடி புகுத்தப் படுவதை தடுப்பதற்குமாக சுரண்டல் முறையுடன் சேர்ந்த சகல கூடாத எண்ணங்களையும் இல்லாமல் செய்யும் நோக்கத்துடன் நடத்துகின்ற வெகுஜன புரட்சிகர மய இயக்கத்தை வாழ்த்தி வரவேற்கின்றோம்.

அல்பேனிய மக்களும் அவர்களது கட்சியும் வருங்காலத்தில் இன்னும் பல பெரும் வெற்றிகள் அடைய வேண்மென வாழ்த்துகிறோம். அவர்களது மகத்தான தலைவர் தோழர் அன்வர் ஹோஜா நீடுழி வாழ்க என வாழ்த்துகிறோம்.

பதிப்பித்து வெளியிடுபவர்: ஏ. ஜயசூரிய, 123, யூனியன் பிளேஸ், கொழும்பு-2, அச்சிட்டது: ''தொழிலாளி'', அச்சகம் 121, யூனியன் பிளேஸ், கொழும்பு-2.